# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் : 11 இதழ் : 12 நொவெம்பர், 1959 விலை : சதம் 15



# அட்டைப் படம்



இலங்கை இயற்கை வனப்பின் ஓர் அம்சமாக விளங்குவது அதன் நீர்வீழ்ச்சிகளாகும். இலங்கையிலுள்ள நீர் வீழ்ச்சிகளுள் தியலும நீர்வீழ்ச்சி தலைசிறந்து விளங்குகின்றது. இது அப்புத்தளை–வெள்ளவாய பாதையில் கொஸ்லந்தையிலிருந்து $2\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ளது. 570 அடி வரை செங்குத்தாக விழுகின்ற இந்த நீர் வீழ்ச்சி உலகத்திலேயுள்ள உயர்ந்த நீர் வீழ்ச்சிகளுள் ஆறாவது தானத்தைப் பெறுகின்றது. ஊவாமலைச் சிகரத்திலிருந்து உற்பத்தியாகும் சிற்றாறுதான் இந்த நீர் வீழ்ச்சிக்குக் காரணமாகும். இந்த ஆறு பூனகல என்னும் இடத்திற் காணப்படும் பள்ளத்தின் வாயிலாகக் கீழே வெள்ளவாய சமபூமியில் செங்குத்தாக வீழ்கின்றது. வரட்சிக் காலத்தில் இது ஓர் நீரோடையாகக் காட்சியளிக்கின்றது. அக்காலத்தில் நீர் வீழ்ச்சியும் குறைவாகவேயிருக்கும். ஆனால் மழைக் காலத்தில் இது பெரிய நீர் வீழ்ச்சியாகமாறி, பார்ப்போர் உள்ளத்தில் பயபக்தியை உண்டாக்கி விடுகின்றது. இலங்கையிலுள்ள ஏனைய நீர்வீழ்ச்சிகளுடன் சம்பந்தப்பட்ட கதைகளும் வரலாறுகளும் பலவுள. ஆனால் தியலும சம்பந்தமாக எவ்வித கட்டுக்கதைகளும் ஏற்படவில்லை. தியஹலும என்ற சிங்களச் சொற்றொடரின் கருத்து நீர்வீழ்ச்சி என்பதாகும்.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நீதியை நிலைநாட்ட உறுதி கொண்டுள்ளோம் | 3 |
| 2. | விவசாயப் பழமொழிகள் | 11 |
| 3. | பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் | 13 |
| 4. | தென்னிந்திய கோயிற் கட்டடக்கலை | 16 |
| 5. | கலையும் பெண்களும் | 19 |
| 6. | வன்னி | 21 |
| 7. | கண்டி நடனம் | 26 |
| 8. | மெய்ஞ்ஞானப் பெரியார் | 29 |


J. N. R 6047—5,508 (11/59)

# ‘நீதியை நிலைநாட்ட நாம் உறுதி கொண்டுள்ளோம்’

—பிரதமர்

கடந்த மாத இறுதியில் பிரதிநிதிகள் சபையில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்து டாக்டர் என். எம். பெரேரா அவர்கள் தமது உரையில் கூறியவற்றைக் கௌரவ பிரதமர் ஒவ்வொரு விஷயமாக ஆராய்ந்து பதிலளித்தார். பிரதமர் தமது உரையில் கூறியதாவது:

டாக்டர் என். எம். பெரேரா தமது உரையில் இறுதிக் கட்டத்தில் காலஞ்சென்ற பிரதமரின் கொலை சம்பந்தமாக புலன்விசாரணைகள் நடத்த அரசாங்கம் தவறிவிட்டது என்று குறிப்பிட்டார். கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் வணக்கத்துக்குரிய புத்தரக்கித்த தேரோவுடன் என்னைச் சம்பந்தப்படுத்தினார். கட்சித் தலைமைப்பீடத்துக்கு வணக்கத்துக்குரிய புத்தரக்கித்த தேரோ என்னைப் பிரேரித்தாரென்றார். இதுபற்றி எனக்கு இதுவரை தெரியாது. திருமதி விஜயவர்தனாவின் வீட்டில் ஒரு அந்தரங்கக் கூட்டம் நடைபெற்றதாகவும் அங்கு வணக்கத்துக்குரிய புத்தரக்கித்த தேரோ, கௌரவ அவிசாவலைத் தொகுதி அங்கத்தவர் அகற்றப்பட்டால் என்னை இரண்டு மாதங்களுக்குள் பிரதமராக்குவதென்றும் உறுதி அளித்தாரென்றும் டாக்டர் பெரேரா கூறினார். இப்படியான அந்தரங்க மகாநாடு எதுவும் நடைபெறவில்லையென்று நான் கூறுகின்றேன்.

கௌரவ அவிசாவெலைத் தொகுதி அங்கத்தவர் சம்பந்தமான பேச்சுக்கள் நடைபெற்றபோது 9, 10 பேர் திருமதி விஜயவர்தனா வீட்டில் சந்தித்தோம். இந்த ஒரு தடவைதான் நான் கடந்த ஆறு மாதங்களுக்குள் திருமதி விஜயவர்தனா வீட்டிற்குச் சென்றது. 9,10 பேரும் ஒன்றாகச் சென்றிருந்தோம். நான் அங்கு தனிமையாகச் செல்லவுமில்லை. புத்தரக்கித்த தேரோ திருமதி விஜயவர்தனா ஆகியோருடன் அந்தரங்கப் பேச்சுக்கள் நடத்தவுமில்லை.

கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் தமது உரையில் ரெம்பிள் டிரீசில் டாக்டர் கே. கே. யு. பெரேரா திருமதி விஜயவர்தனா ஆகியோரும் நானும் நடத்திய மற்றொரு மகாநாடு பற்றியும் குறிப்பிட்டார். ரெம்பிள் டிறீசிற்குச் சென்றவர்களின் பெயர்களை எவரும் பார்வையிடலாம். அதிலிருந்து அப்படியான மகாநாடு நடைபெற்றதா என்பதை ஆதார பூர்வமாக அறிந்துகொள்ளலாம் எனக் கூறிய பிரதமர், எனது நல்ல நண்பர் எதிர்க்கட்சித் தலைவர். நான் டாக்டர் பெரேரா, திருமதி விஜயவர்தனா ஆகியோருடனாவது, திருமதி விஜயவத்தனா, வண. புத்தரக்கித்த தேரோ ஆகியோருடனாவது அந்தரங்கக் கூட்டம் நடத்தியதாக உத்தியோகப்பற்றற்ற முறையிலாவது ஊர்ஜிதப்படுத்துவாரேயானால் நான் பிரதமர் பதவியிலிருந்தும் மந்திரி பதவியிலிருந்தும் ராஜிநாமாச் செய்யச் சித்தமாயிருக்கிறேன். என்று வற்புறுத்திக் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், “பல்வேறு கூட்டங்களில் நான் குறிப்பிட்ட சில நண்பர்களை கைது செய்ய வேண்டாமென்று பொலிசாருக்கு உத்தரவிட்டதாகவும் குற்றஞ் சுமத்தப்பட்டது. எனக்கு எவர்மீதும் அக்கறை கிடையாது. எவர் கைது செய்யப்பட்டாலும் எனக்குப் பறுவாயில்லை. நான் வகிக்கும் புனிதமான பதவிமேல் சாட்சியாக நான் கௌரவ அங்கத்தவர்களுக்கு இந்த உறுதியை அளிக்கின்றேன். பொறுப்புணர்ச்சியுடையவன் நான். காலஞ்சென்ற பிரதமரின் கொலை பற்றி விசாரணை நடத்தும் எந்த பொலிஸ் உத்தியோகத்தரையும் நான் தவறான வழியிலாவது வேறு எவ்விதமாயாவது வசப்படுத்த மாட்டேன். இந்தப் பயபக்தியான உறுதியை நான் கௌரவ அங்கத்தவர்களுக்கு அளிக்கின்றேன். இந்த விசாரணைகள் சம்பந்தமாக இங்குள்ளவர்களுக்குள் மிகக் குறைந்த தகவல் தெரிந்தவன் நான் தான்.

நேற்றிரவுகூட ராணி மாளிகையில் இந்த விசாரணைகள் பற்றிய மகாநாடொன்று நடைபெற்றதாகவும் நீதி அமைச்சர் இதில் பிரசன்னமாயிருந்ததாகவும் நான் அறிகிறேன். இந்த மகாநாட்டிலும் நான் சமுகமளிக்கவில்லை.

இந்த விசாரணைகள் பற்றி என்னிடம் எவரும் எப்பொழுதும் ஆலோசனை கலக்கவில்லை. எந்த ஒரு பொலிஸ் உத்தியோகத்தரிடமும் நான் இது பற்றி விபரம் கேட்கவுமில்லை. இந்த விசாரணைகள் பற்றி எதுவிதத்திலும் சம்பந்தப்படுவதில்லை என்று நான் அதிகவனமாக ஒதுங்கி இருந்தேன். நான் பிரதமர் பதவிக்கு வந்ததும் பொலிஸ் பகுதியை கௌரவ வலன்ரின் ஜயவிக்கிரமா வசம் ஒப்படைத்தது பற்றி கௌரவ அங்கத்தவர்கள்

அறிவார்கள். நான் இந்தத் தீர்மானத்தை மாற்றவில்லை. அதைக் கௌரவித்திருக்கிறேன். காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகாவின் கொலை சம்பந்தமான விசாரணைகள் பற்றி பொலிசாரால் கூறப்படும் அல்லது சொல்லப்படும் அல்லது யோசனைகள் மேற்கொள்ளப்படும் எந்த விஷயத்திலும் நான் தலையிடவுமில்லை. தலையிடப்போவதுமில்லை. இவ் விஷயத்தில் நான் இந்நாட்டுப் பிரதமர் என்ற தோரணையிலில்லாமல் எனது கௌரவத்தின் பேரிலும் கண்ணியத்தின் பேரிலும் கூறுகின்றேன். இது சம்பந்தமாக, எனது கௌரவம் எனது வாழ்க்கை இரண்டும் ஒன்ருய் வளர்ந்தவை. கௌரவத்தைப் பிரித்தெடுத்தால் வாழ்வே அற்றுப்போகும் என்று கூறுவேன்.

கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் உத்தியோகப் பற்றற்ற ஒரு கமிட்டியின் முன்னிலையிலாவது நான் சதித்திட்டத்தில் பங்கெடுத்தேனென்று அல்லது விசாரணை முறையில் தலையிட்டேனென்று அல்லது முயற்சித்தேனென்று ஒரு சிறு ஆதாரமாவது காட்ட வேண்டுமென்று வேண்டிக்கொள்கின்றேன். கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் கொண்டுவரவிரும்பும் எந்தக் குற்றச்சாட்டுப் பற்றியும் ஒரு உத்தியோக சார்பற்ற விசாரணையாவது நடைபெறுவதை நான் விரும்புகின்றேன். இப்படியான விசாரணையை நடத்துபவர்களது தீர்ப்பை ஏற்றுக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறேன்.

"இந்த நாட்டுத் தலைவர் என்ற கோதாவில் காலஞ் சென்ற பிரதமரின் கொலை பற்றி பாரபட்சமில்லாமல், பயமோ ஆதரவோ இல்லாமல், விசாரணைகள் நடைபெறுவதையே நான் விரும்புகிறேன். இதுவே எனது உறுதியான விருப்பம். நாம் பிழையானதொன்றைச் செய்துவிட்டோமென்று எவரும் கூற இடமளிக்கமாட்டேன். எதிரிகளுடனுன தொடர்பு பற்றியும் விசாரணை நடத்துபவர்களுடனுன தொடர்பு பற்றியும் இவ்வளவும் கூறினேன் எனக்கூறி," பிரதமமேலும் பேசுகையில், "கடந்த மாதம் 25 ம் 26 ம் தேதிகளில் நடைபெற்ற விஷயங்கள் எதிர்பாராதவை. திடீரென நிகழ்ந்தவை. இந்நிலையில் யார் அரசாங்கத்தை அமைக்கவேண்டும், யார் அமைக்கக்கூடாது என்று எடைபோட முடியாமலிருந்தது. இந்நாட்டின் பிரதமராக வரவேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கனவிலும் தோன்றவில்லை என்பதை முதலில், இப்பொழுதே கூறிவிடுகிறேன். நான் பிரதமர் பதவியை வேண்டவில்லை. இந்த நாட்டுப் பிரதமராகப் பொறுப்பேற்க வேண்டுமென்று மேன்மை தங்கிய மகாதேசாதிபதி அவர்கள் அழைத்தபோது எனக்குப் பெரும் வியப்பாயிருந்தது. நான் பிரதமராய் வரவேண்டுமென்று எவ்வித சதியாலோசனையும் செய்யவில்லை. இந்தப் பதவிக்கு நான் போட்டியிடவில்லை. ஆனுல், சந்தர்ப்பமும் திடீரென நிகழ்ந்த துக்ககரமான சம்பவங்களும் நான் பிரதமாரக வேண்டியதற்கான எதிர்பாராத நிலைமையை உண்டாக்கிவிட்டன.

நான் இந்த நாட்டுப் பிரதமராக வேண்டுமென்ருே எனக்குப் பெருஞ்சுமையாக இருக்கும் இந்தப் பதவியைப் பொறுப்பேற்க வேண்டுமென்ருே எவ்வித சதித்திட்டமும் வகுக்கப்படவில்லை. ஆனுல் பொறுப்பு என்மீது சுமத்தப்பட்டபோது நான் அதை நிராகரிக்கவில்லை. ஆகவே நான் காலஞ்சென்ற பிரதமரின் கட்டளை பெற்றுள்ள எனது சகாக்களை அழைத்து அவரது விருப்பத்துக்கு கடுகளவு பங்கமும் ஏற்படாதவாறு அதே மந்திரி சபையை நிறுவினேன். கௌரவ பண்டாரநாயகா அவர்களது மறைவோடு அற்றுப்போன அரசாங்கத்தின் பதவிக்கு உகந்த அரசாங்கமும் அப்போது நிலவிய அவசர நிலைமைக்கும் எதிர்பாராத சம்பவங்களுக்குமுரியது, அதே அரசாங்கந்தான் என்று நான் கருதினேன். இந்த முறையில்தான் இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டது.

இந்த நாட்டை ஆளுவதற்கான நடத்தை நெறியுடையவன் நான் என்று நான் கூறவுமில்லை. கூறப்போவதுமில்லை. சென்ற மாதம் நிகழ்ந்த சம்பவங்களை நினைத்துப் பார்த்தால் அரசியற்திட்ட ரீதியில் நான் கூருவிட்டாலும் நானும் எனது சகாக்களும் ஒரு பாதுகாவல் அரசாங்கத்தை நிறுவினேம். நாம் அமைதியாக, ஆறுதலாக நாட்டில் சட்டமும் ஒழுங்கும் பாதுகாப்பும் ஏற்படுத்தவென இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது.

### முன்னர் நடைபெருதது

நாம் அரசாங்கத்தை ஏற்றுக்கொண்ட சந்தர்ப்பம் இந்த நாட்டின் சரித்திரத்தில் இதுவரை இடம் பெருதது. மறுபக்கத்தில் நாம் பதவியை அபகரித்தோமென்று வசைமொழி கூறப்பட்டது. நியாயம் நீதியில்லாமல் பலாத்காரத்தால் அல்லது கபட சூழ்ச்சிகளால் அரசாங்கத்தை நாம் பெற்றுக்கொண்டால் இந்த வசைமொழிக்கு நாம் பாத்திரமானவர்கள்தான். ஆனுல் நாம் என்ன சூழ்ச்சியைச் செய்தோம். என்ன கபடஞ் செய்தோம். பலாத்காரம்தான் என்ன செய்தோம். எந்தப் பிழையான வழியைக் கைக்கொண்டோம். நாம் நியாயமற்ற முறையில் பதவிக்கு வந்தோமென்று கூறமுடியுமா ? அவசர காலத்தில் எம்மை அர

சாங்கம் அமைக்கும்படி சந்தர்ப்பங்கள் வகைசமைத்தன. நாம் எமக்கு முடிந்த மிகத்திறமையான முறையில் இப்பணியை மேற்கொண்டோம்.

### கவனமான பாதுகாப்பு

எமது நாட்டின் சரித்திரத்திலேயே மிக இருள் சூழ்ந்த கடந்த சில நாட்களில் வீண் வதந்திகள் மட்டுமல்லாமல் அச்சமும் குடிகொண்டிருந்தது என்பதையும் இது ஆதாரமற்ற அச்சமல்ல என்பதையும் கௌரவ அங்கத்தவர்கள் மனதில் கொள்ள வேண்டும். காலஞ் சென்ற பிரதமரின் இறுதிச் சடங்குகளின்போது கூட நாம் மிகக் கவனமான பாதுகாப்புகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. நாட்டின் வழமையான விவகாரங்கள் ஒழுங்கீனத்தாலும் குழப்பங்களாலும் சீர்குலையாமலிருக்க நாம் இந்தப் பாதுகாப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. நாடு குழப்பமுற்ற, நெருக்கடியான, திக்குத்தெரியாத நிலையிலிருந்தது. அரசாங்கம் நாட்டில் தோன்றிய நிலைமையை ஆராயவென பிரதி தினமும் கூட்டம் நடத்தியது. பத்திரிகைத் தணிக்கை போன்ற சில விதிகள் கடினமானவை என்று நானே ஒப்புக்கொள்ளுகிறேன். புதிய நிலைமைகள் தோற்றத் தோற்ற நாம் நாளுக்குநாள் கூடி சில நடவடிக்கைகளை மேற்கொண்டோம். சில நிலைமைகளைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் நன்கு ஆராய்ந்த பின்னர் மேற்கொண்டது.

சில சட்டங்கள் தேவையில்லை யென்று நாம் கண்டபோது அவற்றை ரத்துசெய்தோம். நாம் விதித்த சடங்குகளில் அதிகம் கண்டனத்துக்குள்ளானது பத்திரிகைத் தணிக்கையே. இந்தப் பத்திரிகைத் தணிக்கை மூன்று விதமான பிரசுரங்களைப் பற்றியது. முதலாவது கொலை சம்பந்தமான செய்திகள் பற்றியது. இரண்டாவது அரசாங்கம் சம்பந்தமான செய்திகள். மூன்றுவது அரசாங்க அலுவல்கள் சம்பந்தமான செய்திகள்.

ஒருவார காலத்துக்குள் அரசாங்கம் இந்தப் பத்திரிகைத் தணிக்கை கடினமானதென்று உணர்ந்து நமது விருப்பத்திற்கேற்றது அதுவல்ல என்று நாம் ஒப்புக்கொண்டோம். இது பற்றி நாமே நமது மனதைத் தொட்டுப் பேசினோம். பத்திரிகைத் தணிக்கை இல்லாமல் நாம் செயலாற்றலாமென்று நாம் உணர்ந்தோம், மிகக்கூடிய விரைவில் நாம் மூன்றிலொரு பங்கு பத்திரிகைத் தணிக்கையை நீக்கி விட்டோம்.

அடுத்து, ஒரு வார காலத்தின் பின்னர் நான் பத்திரிகையாளர்களை அழைத்து மகாநாடொன்று நடத்தினேன். எமது கருத்தை அவர்களிடஞ் சமர்ப்பித்து அவர்களது கடமை பற்றி பரிவுடன் நினைவு படுத்தினேன். அரசாங்கப் பாராளுமன்றக் கட்சியினரைக் கலந்தாலோசிப்பதென்று வாக்குறுதி கொடுத்து, மறுநாள், பத்திரிகைத் தணிக்கையை முற்றுகவிலக்கினேன். இப்பொழுது பின்னேக்கிப் பார்க்கும் பொழுது பத்திரிகைத் தணிக்கையே யில்லாமலிருந்தால் நான் விரும்பியிருப்பேனென்பது படுகிறது. நாம் வாழ்வதே புதியனவற்றைக் கற்றுக் கொள்ளத்தான். சுதந்திரப் பத்திரிகையுலகத்திற்கே அவமானம் தேடிக்கொள்ளக் கூடிய ஒரு செய்தியைத் தணிக்கைக்கு முன்னர் பத்திரிகையொன்று பிரசுரித்தது. இதனுல் பத்திரிகைகளும், கற்றுக் கொள்வதற்கே இருக்கின்றன என்று நம்புகிறேன். இப்படியான பிரசுரங்கள் பற்றிய விபரங்களை நான் இங்கு குறிப்பிடவில்லை. ஆனுல், பொலிஸ் விசாரணைகள் ஒரு பத்திரிகை மூலம் அம்பலப் படுத்தப்பட்டன என்பது எமக்கு நன்கு புலனுகிற்று.

இருந்தாலும் பத்திரிகைத் தணிக்கை வெறுக்கத் தக்கதொரு நடவடிக்கை என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். நாம் அதை அகற்றி விட்டோம். கடந்த சில நாட்களில் இந்த நாடு கண்டது போன்ற பத்திரிகைத் தணிக்கை மற்றெரு தடவை இங்கு நிகழாதிருக்குமாக. கடந்த சில நாட்களாக நாம் எமது செய்கை மூலம் எமது நடவடிக்கை முறைகளை நாம் மாற்றிக் கொள்ளவும் கண்டனங்களுக்குச் செவிசாய்க்கவும், கற்றுக் கொள்ளவும் சித்தமாயிருக்கிறேம் என்பதைக் காட்டிவிட்டோம்.

### புதிய விதி

எதிர்க் கட்சி அங்கத்தவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நாம் செவிசாய்த்தது பற்றிய பல சான்றுகளைக் கூறுகின்றேன். கௌரவ வெள்ளவத்தை–கல்கிசைத் தொகுதி அங்கத்தவர் தொழிற் சங்க உதவிகள் பற்றி என்னைக் கண்டு பேசினர். அப்போதிருந்த சட்டங்கள் தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கு இடையூருக இருந்ததைக் கவனித்து நான் உரிய உதவி அளிப்பதென உறுதி கூறி, தொழிற் சங்கங்கள் தமது வழமையான கூட்டங்களை நடத்த வகை செய்து புதிய சட்டங்கள் அமைத்தன.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றிய விஷயமும் உண்டு. அரசாங்கப் பாராளுமன்றக்

கட்சியைச் சேர்ந்த ஒரு அங்கத்தவர் இந்தியாவில் நோய்வாய்ப்பட்டிருக்கவும், மற்றெருவர் அவுஸ்திரேலியாவில் மகாநாடொன்றிற்குச் சென்றிருக்கவும் கூட, நான் நிலைமையைப் பரிசீலனை செய்த பின்னர் இந்த வாக்கெடுப்பை நவம்பர் மாதத்தில் நடத்துவதென இணக்கந் தெரிவித்தேன். பின்னர் கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் என்னைச்சந்தித்து முன் சொன்னதற்கும் முன்னதாக ஒரு திகதி கொடுக்கப்படவேண்டு மென்று கேட்டபோது, நான் அதற்கும் சம்மதம் தெரிவித்தேன். குறுகிய முன்னறிவித்தலுடன் பிரயாண வசதி பெற்றுக் கொள்ள முடியாததால் அவுஸ்திரேலியாவிலிருந்து இங்கு வரமுடியாதிருக்கும், கௌரவ அங்கத்தவரின் வாக்கை நான் இழந்த போதிலும், நான் கௌரவ எதிர்க்கட்சித் தலைவரின் வேண்டுகோளுக் கிணங்கி, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்திற்கு இடமளித்தேன். ஜனநாயக அடிப்படையில்லாத ஒரு மந்திரிசபையின் அல்லது பிரதமரின் முறை இதுவல்லவே !

ஹன்ஸாட் பத்திரிகையில் சொற்பொழிவுகள் பிரசுரிக்கப்படுவது பற்றிய விஷயமுமுண்டு. பிரதிநிதிகள் சபையில் நிகழ்த்தப்படும் உரைகள் யாவும் ஹன்ஸாட்டில் வெளியாகுமா என்று ஒரு கட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் ஐயுற்றுர். சபையின் விதிகளுக்கமைய நிகழ்த்தப்படும் உரைகள் யாவும் அவசியம் ஹன்ஸாட்டில் இடம் பெறுமென்று நான் கூறியதுடன் அந்த அச்சமும் நீங்கியிருக்கிறது.

### வருத்தப்படுதல்

பொது மக்கள் கலரிகள் காலியாயிருப்பது குறித்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். கலரிகளுக்கு பொது மக்களைக் கட்டுப்பாடில்லாமல் அனுமதிக்க முடியாமற் போனது குறித்து எதிர்க்கட்சித் தலைவரைப்போலவே நானும் மனப்பூர்வமாக வருத்தப்படுகிறேன். இது உண்மை. கௌரவ அங்கத்தவர்களின் பாதுகாப்பை மனதிற் கொண்டு சில நாட்களுக்கு பொது கலரிகளுக்கு எவரையும் அனுமதிக்கக் கூடாதென்று எனக்கு ஆலோசனை விடுக்கப்பட்டது. நாம் அடுத்த முறை கூடும் போது கலரிகளில் பொது மக்கள் கூடியிருப்பார்களென்று நான் நம்புகிறேன். இதுவும் ஒரு வெறுக்கத் தக்க சட்டமென்பதில் சந்தேகமேயில்லை. ஆனுல் சிறிது காலத்திற்கு நாம் இதைப் பொறுத்துக் கொள்வோமாக. அடுத்த முறை கலரிகள் நிரம்பியிருக்கக் காண்போமாக.

"ஸ்கொட்லன்ட்யாட்" உத்தியோகத்தர்கள் வருவது பற்றியது அடுத்த விஷயம். இங்கு கூட நாம் அரசாங்கப் பாராளுமன்றக் கட்சி அங்கத்தவர்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் வெளியாகிய கண்டனத்திற்குச் செவிசாய்த்தோம். விசாரணைகள், உரியபடி, நடைபெறவில்லை யென்றும், ஆகவே "ஸ்கொட்லன்ட்யாட்" உத்தியோகத்தர் அழைக்கப்பட வேண்டுமென்றும் யோசனை விடுக்கப்பட்டது. அரசாங்கத்திற்கும், பொலிசாருக்கும் உதவியளிக்கவென இரண்டு உயர்தர குற்றப்புலன் விசாரணை அதிகாரிகள் நாம் இந்த விவாதத்தை நடத்தும்போது, இலங்கை வந்து சேர்ந்துவிட்டார்களென்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

### உள்ளூர் ஆட்சிச்சபைத் தேர்தல்கள்

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் பற்றியது அடுத்தவிஷயம். இத்தேர்தல்களை நாம் இலகுவாகப் பின்போட்டிருக்கலாம். அவசர காலத்தைக் காட்டி நாம் தேர்தல்களைப் பின்போட்டிருக்கலாம். ஆனுல், நாம் அப்படிச் செய்தோமா ? அதுதானில்லை.

நாம் மக்கள் சார்பில் கடமைப்பாடு உடையவர்களாயிருந்தோம். ஜனநாயக உள்ளம் படைத்தவர்களாயிருந்தோம். ஆகவே, தேர்தல்களைப் பின்போடக் கூடாதென்றும், அவை சற்றுக் கடினமான சூழ்நிலையில் நடைபெற வேண்டுமென்றும் நாம் தீர்மானித்தோம். கடினமான சூழ்நிலையில் இத் தேர்தல்கள் நடைபெறுமென்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறேம். ஆனுலும் கடினமான நிலையிலும் தேர்தல்கள் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறுவது உள்ளூராட்சி சபைகளின் விருப்பத்திற்கு மாறுக அவற்றைக் காலவரையறையின்றிப் பின்போடுவது உசிதமல்ல என்று நாம் கூறுகிறேம். நாம் பொலிசாருடன் ஆலோசனை கலந்தோம் ; இத்தேர்தல்கள் நடைபெறலாமென்று அவர்கள் சொன்னுர்கள். இவையெல்லாம் மக்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் பொறுப்பில்லாத ஒரு அரசாங்கத்தின் செயல்களா ?

கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் எம்மீது சுமத்தும் பழிச்சொற்கள் பற்றி எடுத்துக் கூற இன்னுமென்ன இருக்கிறது—கலரிகள் காலியாயிருப்பதா ? அவசரகாலச் சட்டங்களா ? அவசரகாலச் சட்டங்கள் வெறும் கடுதாசியில் மட்டும் இருக்கிறது.

இராணுவத்தாரும், பொலிசாரும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வழமையான உரிமைகளை மீறியதாயிருக்க மாட்டாதென்று நாம் எதிர்க்கட்சி

அங்கத்தவர்களுக்கும் அரசாங்க அங்கத்தவர்களுக்கும் உறுதி கூறுகிறேம். பொலிசாராவது, ராணுவத்தினராவது தமது அதிகாரத்தை மீறியாவது, பொது மக்கள் மீது துவேஷம் பாராட்டியாவது நடந்து கொண்டார்களா என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். அவசர காலம் நிலவுகின்ற போதிலும் எவராவது அது பற்றிப் பாதிக்கப்படுகிறுர்களென்று சொல்வதற்கில்லை. பொலிசாரும், ராணுவத்தினரும் நடந்துகொண்ட முறை மிகவும் பரிவானது, பாராட்டுதற்குரியது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள்.

விளக்க மறியலில் இருப்பவர்கள் சம்பந்தமான சட்டங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டது. இச்சட்டங்களை பொலிசாரும், சட்ட உத்தியோகத்தர்களும் சிபார்சு செய்தார்கள். நான் இதைப் பற்றி மந்திரி சபையைக் கலந்து ஆலோசித்தேன். இந்த வழக்குச் சம்பந்தமாக இந்தச் சட்டம் அவசியமாயிருந்தது என்று நாம் நெடு நேர ஆலோசனையின் பின்னர் முடிவு செய்தோம்.

நானும், மந்திரி சபை அங்கத்தவர்கள் பலரும் இந்த அவசரகாலச்சட்டம் அமுலாக்கப்பட்ட உடன் ஆட்சேபனையும் கண்டனமும் பிறக்குமென்று எதிர்பார்த்தோம். இருந்த போதிலும், இதில் சம்பந்தப்பட்ட சிக்கல்களை நாம் பரிசீலனை செய்த போது இப்படியான சட்டங்கள் இல்லாத பட்சத்தில் விசாரணைகள் எப்படிப் பாதிக்கப்படும் என்று எண்ணியபோது, எதிர்க்கட்சித் தலைவர் கனகச்சிதமாக எடுத்துச் சொன்னுரே. நீதி நிலைநாட்டப்பட வேண்டியது அவசியம், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். காலஞ்சென்ற பிரதமரின் கொலை சம்பந்தமான சதித்திட்டம் பற்றிய ஒவ்வொரு தகவலும் சேகரிக்கப்பட வேண்டும், என்று. அதையெல்லாம் எற்றிப் பார்த்த போது, இந்தச் சட்டங்களை சிறிது காலத்திற்காவது அமுலாக்குவோம் என்று முடிவு செய்யவேண்டியதாயிற்று. நாம் இதற்குமேலுஞ் சென்றேம். ஆட்சேபனைக்குள்ளாக நேரிடுமென்று மந்திரி சபை உணர்ந்ததால் நாம் நீதியமைச்சரிடம் சட்டப் புத்தகத்தில் நிலைபெறக் கூடியதாக விளக்க மறியற்காரர் சம்பந்தமான அவசரகால சட்டங்களுக்குப்பதில் நகல் சட்டங்களைத் தயாரிக்கும்படி கேட்டுக் கொண்டோம். தற்போதய சட்டங்கள் தற்காலிகமானவை யென்பதையும் வழக்குச் சம்பந்தமான விவகாரங்களைப் பாதுகாக்கவென புதிய சட்டங்கள் இயற்றப்படுகின்றன என்பதையும் நாம் சபையில் உறுதி கூற விரும்புகிறேன்.

**மரண தண்டனை**

மரண தண்டனை பற்றிய அவசரகாலச் சட்டங்கள் பற்றியது அடுத்த குறிப்பு. இதிலும், மந்திரிசபை மரணதண்டனை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென முடிவு செய்தது. முடிவு செய்த மறுநாளே இதை அமுல் நடத்த முடியாத காரணத்தால் அது அவசரகாலச் சட்டங்களின் உதவியைத் தேடி உரிய சட்டங்கள் சபையின் அங்கீகாரம் பெறும் வரைக்கும் மரண தண்டனையை அமுல் நடத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டது. அவசரகாலச் சட்டங்கள் தவிர்க்க முடியாத தேவையேற்படும் வரைமேற்கொள்ளப்படமாட்டா. தவிர்க்க முடியாத நிலையில்தான் நாம் அவசரகாலச் சட்டங்களின் பாதுகாப்பைப் பெற்றுக் கொண்டோம். இந்த சத்திய உறுதியை நான் கௌரவ சபை அங்கத்தவர்களுக்கு அளிக்கிறேன்:—

அவசரகாலச் சட்டங்களைப் பயன்படுத்த வேண்டிய தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டாலன்றி நாம் அவற்றைப் பிரயோகிக்க மாட்டோம்."

பகற் போசன இடைவேளையின் பின்னர் பிரதமர் தொடர்ந்து பேசினுர்.

"இடைவேளை வரைக்கும் நான் நிகழ்த்திய உரையில் அரசாங்கம் சபையின் நம்பிக்கையை இழப்பதற்குப் பதிலாக சபையின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான முறையில் நடந்து கொண்டது என்பதை கௌரவ அங்கத்தவர்களுக்கு எடுத்துக் காட்டினேன்.

கூடிய விரைவில் தேர்தல் இடாப்புகளைத் தயாரிக்கும்படி அரசாங்கம் தேர்தல் பகுதி அதிகாரிக்கு உத்தரவிட்டிருக்கிறது என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன். இந்த இடாப்புகள் இரண்டு வகையில் தயாராகின்றன. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்கம் வீழ்ச்சியடைந்தால் பழைய முறையில் 4 மாத காலத்திற்குள் தேர்தல் நடத்த வகை செய்து தற்போதைய முறையில் இடாப்புக்கள் தயாராகுவது ஒன்று. மற்றது 18 வயதானவர்களுக்கும் வாக்குரிமையளிப்பதற்கான புது முறையிலானது. ஆகவே, சபையினதும், மக்களதும் அங்கீகாரமின்மையைப் பெற்றுக் கொள்ளாமல் அரசாங்கம் பாராளுமன்றத்தாலும், மக்களாலும் துரத்தப்பட்டாலுங் கூட தனது வெளியேற்றத்திற்கும் வகை செய்கிறது.

**சமாதானமும் அமைதியும்**

இந்த குறுகிய மாதத்தில் நாம் மக்களை மீண்டும் சமாதான, அமைதி நிலைமைக்குக் கொண்டு

வரவும், நாட்டில் குழப்பமேற்படாமல் தடுக்கவும் எம்மாலான எல்லாவற்றையும் செய்துவிட்டோமென்று கௌரவ அங்கத்தவர்களுக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நாட்டின் பல்வேறு பாகங்களிலும் பல்வேறு விதமான குழப்பங்கள் ஏற்பட்டதாகச் செய்திகள் கிடைத்துள்ளன. நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள எமது நிருபர்கள் சில அசம்பாவித சம்பவங்கள் நிகழ்ந்ததாக எமது காரியாலயத்திற்கு அனுப்பியுள்ள அறிக்கை என் முன்னேயிருக்கிறது.

எனக்கெழுதியுள்ளவர்களில் 56 பேர் பிக்குகளும், 16 கிராமச் சங்கத்தலைவர்கள் போன்ற பல்வேறு ஸ்தாபனப் பிரதிநிதிகளுமாவர். இந்த அறிக்கைகள் நாட்டில் பூரண அமைதி நிலவும் வரை பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தைக் குறிக்கின்றன.

இனி, கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் கெச்சிதமாகவும், நாவன்மையுடனும் விடுத்த சில வாதங்களைப் பார்ப்போம். இலங்கை வானொலியை பாரபட்சமாகப் பயன்படுத்திக் கொண்ட குற்றம் அரசாங்கத்தைச் சார்ந்தது என்றார் அவர். வண. புத்தரக்கித்த தேரோவிற்கு இலங்கை வானொலியில் உரை நிகழ்த்த அனுமதிக்கப்பட்டமைக்குப் பொறுப்பு பிரதமர் தான் என்றார் டக்டர் பெரேரா. எந்த ஒரு பிக்குவையும் வானொலியில் பேசும்படி நான் கேட்டவில்லை. இருந்த போதிலும், பேசுபவர்களின் பட்டியல் கௌரவ தபால், ஒலிபரப்புத் தகவல் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இப்பட்டியல் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் கூட நான் அதற்கு அனுமதி வழங்கியே இருப்பேன். அதாவது செப்டெம்பர் மாதம் 27 ந் திகதியன்று அந்தப் பட்டியலை அனுமதிப்பதில் எதுவும் தப்பாக இருக்கவில்லை. இதற்கு இரண்டு வாரங்களுக்கு பின்னர்தான் வண புத்தரக்கித்த தேரோ கைது செய்யப்பட்டார். ஆகவே, ஒரு குறிப்பிட்ட நபர் கொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர் என்பதை இலங்கை வானொலி அதிகாரிகள் இரண்டு வாரங்களுக்கு முன்னரே அறிந்திருக்க முடியாது. இந்த அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இலங்கை வானொலியில் ஒலி பரப்பப் பட்ட அரசியல் குறிப்புகளிலிருந்து சில பகுதிகளை எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார். "அரசியல் குறிப்புகளில்" ஒலிபரப்பப்பட்ட ஒவ்வொரு சொல்லும் எல்லா சபை அங்கத்தவர்களுக்கும் கிடைக்கக் கூடியதாயிருக்கிறது. எவராவது, ஒவ்வொரு நாளும் ஒலிபரப்பாகிய அரசியல் குறிப்புகளைப் பெற்று, குறிப்பிட்ட எந்தப் பகுதியையும் கண்டனஞ் செய்யலாம். கௌரவ. எதிர்க்கட்சித்தலைவர் தமதுரையில் குறிப்பிட்ட சில பகுதிகளைப் பற்றிப் பார்ப்போம். ஓரிடத்தில் அவர் தர்ம—தீப—அதர்ம தீப அதாவது தர்ம தீவு அதர்ம தீவு என்பது பற்றிக் குறிப்பிட்டார். சம்பந்தப்பட்ட கட்டுரை வருமாறு: "பிரதமர் கௌரவ. டபிள்யு. தகநாயக்கா, 1947 ம் ஆண்டிலும், 1953 ம் ஆண்டிலும் அவசரகாலச் சட்டங்கள் பற்றிப் பேசியதை ஒரு பத்திரிகை பிரசுரித்தது. இந்தப் பத்திரிகை இதை மறந்து விட்டது. அப்பொழுது சட்டமின்மையும், ஒழுங்கின்மையும், இன்றி மனத் திருப்தி, நல்லெண்ணம் ஆகியன நிலவின. அடுத்த சில ஆண்டுகள் மற்றொரு காட்சியைத் தருகின்றன. "தர்ம-தீபம்" என்று அழைக்கப்பட்ட இலங்கைத் தீவு "அதர்ம தீபம்" என்றழைக்கப்படலாயிற்று. இதுவரையில் அந்தப் பத்திரிகை "அரசியல் குறிப்பிலிருந்து" குறிப்பிட்டுவிட்டு, அடுத்த வசனத்தைத் தவிர்த்து விட்டது. நான் அதைச் சொல்லுகிறேன் :—

கடந்த 100 வருஷ காலத்திற்குள் உதித்த இலங்கையின் தவப் புதல்வன் பட்டப் பகலில் கொழும்பிலுள்ள தமது இல்லத்தில் கொலை செய்யப்பட்டதுடன் சட்டமின்மை அதன் உச்ச நிலையை அடைந்துவிட்டது.

இந்த வசனத்தை "அரசியல் குறிப்பிலிருந்து" பிரித்து காலஞ் சென்ற பிரதமர் நாட்டிற்குச் செய்த அரும், பெரும் சேவைகள் மறைக்கப்பட்டன. தொடர்ந்து வந்த அடுத்த வசனமும் அங்கு தரப்பட்டிருந்தால், "அரசியல் குறிப்புகளை" யார் எழுதினாலும் சரி அதை எழுதியவர் விஷயங்களை உரியபடி தந்து, எம்மைத் துக்க சாகரத்தில் மூழ்க வைத்து, எம்மை விட்டுப் பிரிந்த பிரதமருக்கும் உரிய அஞ்சலி செலுத்தி கசப்பான உண்மையாகிய கடந்த சில ஆண்டுகளில் இடம் பெற்ற சட்டமின்மையையும் எடுத்துக் கூறியிருக்கிறார் என்பது தெளிவு.

கௌரவ உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சர் பற்றிய குறிப்பு சம்பந்தமாக அடுத்த ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இந்த அரசியல் குறிப்புகள் ஒலி பரப்பப் பட்ட தினமாகிய ஒக்டோபர் மாதம் 6 ந் திகதிக் குறிப்புக்களை நான் பார்வையிட்டேன். அதில் **சொக்ஸி.** அறிக்கையை அமுல் நடத்துவது பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. "அரசியல் குறிப்புகள்" கூறியது இதுதான். "உள்ளூராட்சி அமைச்சர்

கடந்த மே மாதத்தில் பதவியேற்றது முதல் இது வரையில் நிலை நாட்டிய முதல் சாதனை இதுவென்று குறிப்பிடப்பட்டது.

**சொக்ஸி** அறிக்கையில் கண்டுள்ள சிபார்சுகளின் சுருக்கம் வருமாறு : முனிசிப்பல் சபைகள், பட்டண சபைகள், நகர சபைகள் கிராமச் சங்கங்களாகிய உள்ளூராட்சிச் சபைகள் தமது வரியிறுப்போருக்குச் சிறந்த, மேலதிக வசதிகள் அளிப்பதற்கு தத்தமது வருவாயைப் பெருக்குவதற்கான புதிய வழிவகைகள். இம்முடிவுகள் பிரதமருடன் கலந்தாலோசனை நடத்திய பின்னர் இயற்றப்பட்டவை.

இதுவரை உள்ளூராட்சிச் சபைகளின் வருவாயும், கடனுதவியாக மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது. இக்காரணம் பற்றி அரசாங்கம் **சொக்ஸி** அறிக்கையில் கண்டுள்ள சில சிபார்சுகளை அமுல் நடத்த இருக்கிறது. "அமுலாக்கப்பட இருந்த ஏனைய சிபார்சுகள் பற்றியும் நாலு பந்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்படியான சில குறிப்புகள் மந்திரிமாரின் பல்வேறு நடவடிக்கைகள் பற்றியும் அரசியல் குறிப்புகளில் வெளியிடப்பட்டன. இப்பொழுது நான் படித்துக் காட்டியது ஒக்டோபர் 6 ந் திகதி அரசியல் குறிப்புகளிலிருந்து தான். இனி, ஒக்டோபர் மாதம் 10 ந் திகதியன்று ஒலி பரப்பாகிய அரசியல் குறிப்பிலிருந்து ஒரு பகுதியைப் படிக்கிறேன் :

" தற்போதைய அடிப்படையில் வேலைகளை மேற்கொள்வது மிகக் கடினமென்று சில சங்கங்கள் கண்டிருப்பதாக கௌரவ ரி. பி. இலங்கரத்ன மகாநாட்டில் சுட்டிக் காட்டினார். அரசாங்கம் அளிக்கும் உதவி 50 சத விகிதத்திலிருந்து 75 சத விகிதமாக உயர்த்தப்பட வேண்டும். இது கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சம்பந்தமான மிக முக்கிய தீர்மானம். அடுத்த 12 மாதங்களில் பெரும் திட்டமொன்றை மேற்கொள்ள இது புதிய வகையாயிருக்கும்". பத்திரிகைகள் இந்த அரசாங்கத்தின் மீது துவேஷம் பாராட்டுவதால் அரசாங்கம் தனது கட்சியை எடுத்துச் சொல்ல ஒரு சாதனம் வேண்டும் என்பதே நீங்கள் அறிவீர்கள். பிரதிநிதிகள் சபை அங்கத்தவர்களின் பரிசீலனைக்கும், கண்டனத்திற்கும் கிடைக்கக் கூடிய "அரசியல் குறிப்புகள்" சில விஷயங்கள் குறித்து அரசாங்கத்தின் கருத்துக்களை வெளியிட 10, 15 நிமிஷங்கள் அளிக்கிறது.

கௌரவ எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி ஏதாவது குறிப்பிடப்பட்டிருந்தால் அது பற்றி நானே கோபப்படுவேன். நானும், கௌரவ தபால் ஒலி பரப்புத் தகவலமைச்சரும் இதுபற்றிய பூரண விசாரணை நடத்துவோம்.

ஏனைய மந்திரி சபை அங்கத்தவர்களிடம் நான ஏதோ இரகசிய இணக்கஞ் செய்து கொண்டதாக வும் எதிர்க்கட்சித் தலைவர் பெரும் குற்றஞ் சுமத்தினார். மந்திரி சபை அங்கத்தவர்கள் என்றுமே ஒன்றுபட்டு நின்றோம். ஆகவே எமக்கிடையே உயர்வு, தாழ்வுமில்லை. இரகசிய ஒப்பந்தங்களுந் தேவையில்லை. பாராளுமன்றமும், மக்களும் விரும்பினால் நாம் பதவியிலிருந்து வெளியேற ஆயத்தமாயிருக்கிறோம். ஏனைய மந்திரிமாருடன் எனக்கு எவ்வித இரகசிய ஒப்பந்தமுமில்லை. அவர்களுக்கும் என்னுடன் இப்படியான அந்தரங்க இணக்கமுமில்லை.

மிகவும் கடினமான நிலையில் நாம் இந்த நாட்டை ஆள எத்தனிக்கிறோம். சாக்கு, போக்குகளால் நாம் பதவியைப் பிடித்துத் தொங்கவில்லை. ஆகவே தான் நாம் கௌரவ சபை அங்கத்தவர்கள் முக்கிய விஷயங்கள் குறித்து விவாதிக்கவும் அவை பற்றி தீர்மானமியற்றவும் எல்லா வசதிகளையுமளிக்கிறோம். பதவியை இறுகப் பிடித்திருப்பவர்கள் வெளியேறுவதற்கான உத்தரவு கிடைத்தால் தமது வெளியேற்றத்திற்கான வழியைச் செம்மைப்படுத்த மாட்டார்கள்.

எமது மனத்திற்கு ஜனநாயக முறையல்ல என்று படும் எதையும் இந்த அரசாங்கம் செய்யாது என்று உறுதி கூறுகிறேன். இந்தச் சத்திய வாக்கை நாம் சபைக்கு அளிக்கிறோம். முக்கியமாகக் காலஞ்சென்ற பிரதமரின் கொலை சம்பந்தமாகக் குற்றவாளிகள், அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாயிருந்தாலும்—அவர்களுக்குத் தண்டனை அளிப்பதில் அரசாங்கம் தன்னாலானதைச் செய்யும். இந்த வழக்குச் சம்பந்தமாக நாம் மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளும் தகுந்த உத்தியோகத்தர்களதும், உரிய அதிகாரச் சபையினதும் ஆலோசனைக் கிணங்கவே நடைபெறும்.

பொலிஸ் பகுதிக்கு நேரடிப் பொறுப்பாளியாயிருக்காமல் ஒதுங்குவதற்கு நான் அரசாங்கத் தலைவராயிருந்ததால் பெரும் வருத்தத்திற்குள்ளானேன்.

சபையின் இரு தரப்பினருக்கும், மக்களுக்கும் நாம் நியாயமாக, நீதியாகப் பாரபட்சமில்லாமல் நடந்துகொள்ளுகிறோம் என்பதைக் காட்டும் பொறுப்பை நான் பரிவுடன் ஏற்றுக் கொண்டேன். ஆகையினாற்றான் நான் பொலிஸ் பகுதியை வேறொருவர் பொறுப்பில் விடுத்தேன். நினைத்திருந்தால் நானே அந்தப் பகுதியை எனக்குக் கீழ் வைத்திருந்திருக்கலாம். நான் அதிகாரத்தை என்மீது போட்டுக் கொள்ளவில்லை. வழக்கு நடவடிக்கைகள் பாதுகாப்பான கைகளில் அளிக்கப்பட்டுள்ளன என்பதை நான் அங்கத்தவர்களுக்கு உறுதியாகக் கூறு

வேன். நீதியமைச்சர் திரு. வலன்ரீன் ஜய விக்கிரமா, நாட்டிலுள்ள தேர்ச்சி பெற்ற சட்ட நிபுணர்களில் ஒருவர். அவர் எமது மதிப்பிற்குரிய சகபாடியுங்கூட. மந்திரிசபை அங்கத்தவர்களாகிய நாம் அவர் மீதும், பொலிஸ் பகுதி மீதும், பூரண நம்பிக்கை கொண்டுள்ளோம். எல்லாக் குற்றவாளிகளும் — பிடிபடுவார்கள் என்றும், நீதி வழங்கப் படுமென்றும் நாம் நம்புகிறோம்.

எமது தரப்பிலுள்ள சபை அங்கத்தவர்களது நடத்தை, நேர்மை ஆகியன பற்றி இந்த விவாதத்திலாவது பிற விவாதத்திலாவது குறிப்பிடப்படுமாஞல் அவர்கள் சார்பில் நான் ஒரு ஆலோசனை விடுக்க விரும்புகிறேன்.

சபாநாயகரே! நீங்கள் எமது உரிமைச் சலுகைப் பாதுகாவலர். எமது பேரிலேயே சொல்கிறேன். இந்த உரைகளின்போது நானே கண்டிக்கப்பட்டேன். நாம் எம்மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு இயன்றளவு பதிலளித்தோம். இருந்தாலும் உத்தியோகபூர்வமாயாவது எமது தரப்பிலுள்ள அங்கத்தவர்களுக்கெதிராக வெளியிடப்பட்ட குற்றச் சாட்டுகளைப் பாரபட்சமின்றி விசாரணை செய்ய வேண்டுகிறேன். நாம் எந்தப் பரீட்சைக்கும் எந்தச் சோதனைக்கும், எந்த விசாரணைக்கும் உட்பட ஆயத்தமாயிருக்கிறோம். எமக்கு எதிராக ஏதாவது ருசுப் படுத்தப்பட்டால் நாம் பாராளுமன்றத்தின் விருப்பத்திற்கு அடி பணிந்து பதவியிலிருந்து வெளியேறுவோம். ஆனுலும், எமது பிரச்சினைகளை நாம் அமைதியுடனும், துணிவுடனும் எதிர்நோக்குவோம். எதுவுமறியாத மக்களை பயங்கரவாதி களினின்றும் காப்பாற்ற வேண்டுமென்ற பெரும் கடமையிலிருந்து நாம் தவற மாட்டோம். மக்களைக்காப்பாற்ற வென்று தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் என்ற கோதாவில் நாட்டில் துஷ்டச் செயல்கள் நிகழாமல் மக்களைக் காப்பாற்றும் பணி எம்முடையது.

இந்த ஒரு கடமைப்பாடுதான் எம்மை இந்தப் பிரமாண்டமான பொறுப்புள்ள ஆட்சிப் பணியை ஏற்று நடத்தத் தூண்டுகிறது. அதுவே, நமது நாட்டின் சரித்திரத்தில் மிக மோசமான கஷ்டமான காலம் எனலாம். கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்ட எல்லா ஜனநாயக விருப்பங்களுக்கும் எமது தரப்பிலுள்ள அங்கத்தவர்கள் சொல்லுக்குச்சொல்லு பதத்திற்குப் பதம் விடை பகர்ந்திருக்கிறோம். நீதி நிலைநாட்டப்படவேண்டுமென்று நாம் திடங்கொண்டிருக்கிறோம்.

கால தாமதஞ் செய்யாமல் நீதி வழங்கப்படு மென்பதைக் காட்ட எமக்குத் தயவுசெய்து சந்தர்ப்ப மளியுங்கள்.

# லக்சபான நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டம்

## பாலத்துறை நிலைய வேலைகள் தொடங்கிவிட்டன

**அபர்டீன்**—லக்சபான நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தின் ஒரு பகுதியான பாலத்துறையிலுள்ள நீராவி நிலைய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

இத்திட்டம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதன்படி, பாலத்துறையில் ஒரு நீராவி நிலையமும், நோட்டன் பிரிஜ்ஜில் ஒரு நீர்வீழ்ச்சி மின்சார நிலையமும் நிறுவப்பட வேண்டும். இவை பூர்த்தியாக்கப்பட்டதும் நாட்டின் மின்சார விநியோகத்தில் 75,000 கிலோ வாட்டுகள் அதிகரிக்கும்.

பாலத்துறையில் உள்ள நீராவி நிலையம், நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாக கேள்விப் பத்திரங்கள் கோரப் பட்டுள்ளன. அப்பிரிவுகள் வருமாறு:—

1. சிவில் எஞ்ஜினியரிங் வேலைகள் (அத்திவாரம், மின்சார நிலையம், இதர கட்டிடங்கள் முதலியன).
2. கொப்பரையும் இதர துணைப்பொருட்களும்.
3. மின்சார உற்பத்தி யந்திரம்.
4. சுவிச்கியர்.

இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும், சுபீட்சத்திற்கும் மலிவு மின்சக்தி அவசியமென்பதை அரசாங்கம் நன்குணர்ந்துள்ளது. எனவே, போக்கு வரத்து, மின்சக்தி அமைச்சர் திரு. மைத்திரிபால சேனுநாயக்கா மின்சக்தி அபிவிருத்தித் திட்டத்திற்கு முதலிடம் கொடுத்திருக்கிறுர். மேலும் ஐந்து திட்டங்களை எதிர்காலத்தில் உருவாக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அவை, வளவைத் திட்டம் சப்தகன்னித் திட்டம், ரந்தெனிகலைத் திட்டம், விக்டோரியா அருவித் திட்டம், இரத்தினபுரித் திட்டம் என்பனவாம். இவற்றுடன் II B கட்டமும் முடிவுற்றுல் மொத்தம் 855,000 கிளோவோட் சக்தியை உற்பத்தி செய்யலாம்.

மின்சாரப்பகுதியின் சரித்திரத்திலேயே முதன் முறையாக இப்பகுதி நாடு முழுவதும் மின்சார மளிக்கத்தக்க நிலையிலுள்ளது.

அரசாங்கம் எல்லா நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் மலிவான செலவில் மின்சக்தியை வழங்குவதற்காக எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்.

# விவசாயப் பழமொழிகள்

[வெள்ளவத்தை திரு. மு. இராமலிங்கம் அவர்கள் தொகுத்தது]

### தை மாதம்

தை ஈனுப் புல்லும் இல்லை. மாசி ஈனு மரமும் இல்லை.

தை பிறந்தது தரை வறண்டது.

தை பிறந்தால் தலைக் கோடை.

தை மழை நெய் மழை.

தை வெள்ளம் தாய்க்குச் சோறு.

### மாசி மாதம்

குடத்திலே கொரடு போட்டால், மாசி மாதம் வான வில் காணின் கம்பிலே கழுதை மேயும்.

மாசிப்பனி மச்சையும் துளைக்கும்.

மாசி மழை மாதாளை பூக்கும்.

மாசி மின்னல் மரந் தழையும்.

### பங்குனி மாதம்

பங்குனி மழை பத்துக்கும் நட்டம்.

பங்குனி மழை பெய்தால் பலனெல்லாம் சேதம்.

பங்குனி மாதத்தில் மழை பெய்தால் பத்து எட்டு சேதம்.

### சித்திரை மாதம்

சித்திரை மழை சின்னப்படுத்தும்.

சித்திரை பத்துக்குமேல் சிறந்த பெருங்காற்று ஐப்பசி பத்திலடங்கும்.

சித்திரை மாதத்து மழை சினையை அழிக்கும்.

சித்திரை மாதத்து மழை சிவத் துரோகம்.

சித்திரை மாசம் சிறந்த மழை பெய்யாமற் போனல் வில்லாததை விற்று வெள்ளாடு கொள்ளு.

### வைகாசி மாதம்

வைகாசி மழை வாழை பெருகும்.

வைகாசி மாதம் வாய் மடையில் ஏர் பூட்ட பொய்யா மல்பூக்கும் புளி.

வைகாசி மாதம் மதிகுறைந்த நாலாம்நாள் பெய்யுமே யாகில், பெருமழையாம்; பெய்யாக்கால் மாசி மறுத்து மருகடலும் நீர் வற்றி ஏரிக்குள் எள்ளு விதை.

### ஆனி மாதம்

ஆனி அடை சாரல் ஆவணி முச்சாரல்.

ஆனி அரையாறு ஆவணி முழு ஆறு.

ஆனி குடுகினுல் அறுபது நாளைக்கு மழையில்லை.

### ஆடி மாதம்

ஆடி அமாவாசை தன்னில் ஆதித்தன் ஒளியைமூடி முகில் மறைந்து மோதினல் நாடியதோர் குளங்கலங்கி அலைகடலும் வற்றித் தலைக்கேடு மேதையளவுந்தான்.

ஆடி அமாவாசையில் மழை பெய்தால் அடுத்த அமா வாசை வரையில் மழையில்லை.

ஆடி அமாவாசையில் மழைபெய்தால் அரிசி விற்ற விலை நெல் விற்கும்.

ஆடி அரவட்டை அகவிலை நெல் விலை.

ஆடி அரை மழை.

ஆடி மாதம் அடி மின்னலைப் பார்த்து பட்டரை திற.

ஆடி முதல் தேதி ஆயிரம் கண்ணுடையான் மூடி முகம் விரியான் ஆமாகில், ஆழி வரண்டும் அண்டம் புரண்டும் நாடு விளையாது நாழி.

ஆடி வெப்பல் ஆட்டுக் கெடைக்குச் சமானம்.

### ஆவணி மாதம்

ஆவணி தலை வெள்ளமும் ஐப்பசி கடைவெள்ளமும் கெடுதி.

ஆவணி மாதம் அழுகல் தூற்றல்.

ஆவணி மாதம் அழுகைத் தூற்றல்.

### புரட்டாசி மாதம்

புரட்டாசி பெரு மழை.

புரட்டாதி பேய்ந்தாலும் பெய்யும் காய்ந்தாலும் காயும்.

புரட்டாசி பேய்ந்து பிறக்க வேண்டும், ஐப்பசி காய்ந்து பிறக்க வேண்டும்.

பெய்ந்தால் பேயும் புரட்டாசி, பெய்யாவிட்டால் பேயும் ஐப்பசி.

பொன்னுருகக் காயும் மண்ணுருகப் பெய்யும் புண்ணியப் புரட்டாசி.

### ஐப்பசி மாதம்

ஐப்பசி அடியோடே காய்ந்தால் அண்டை புலம் போல் என்புலமும்.

ஐப்பசி அடைமழை.

ஐப்பசி அறக் காய்ந்தால் ஆடு ஒருமாடு, மாடு ஒரு மலை.

ஐப்பசிக்கும் கார்த்திகைக்கும் மழை இல்லாவிட்டால் அண்ணனுக்கும் சரி தம்பிக்கும் சரி.

ஐப்பசிக்கும் கார்த்திகைக்கும் மழையில்லா விட்டால் அண்ணனுக்கும் தம்பிக்கும் சரி.

ஐப்பசி தலை வெள்ளமும் கார்த்திகை கடை வெள்ளமும் கெடுதி.

ஐப்பசிப் பனி அத்தனையும் மழை.

ஐப்பசி மாதத்து வெய்யிலில் அன்று உரித்ததோல் அன்றைக்கே காயும்.

ஐப்பசி மாதம் அடைமழை கார்த்திகை மாதம் கன மழை.

ஐப்பசி மாதம் அழுகைத் தூத்தல் அவ்வளவும் பூச்சி

ஐப்பசி மாதம் அழுகைத்தூறல் கார்த்திகை மாதம் கனமழை. ;

ஐப்பசி மாதம் அறக் காய்ந்தால் அண்ணனிட்ட பயிரும் தம்பியிட்ட பயிரும் சரி.

ஐப்பசி மாதம் பசுகறக்குமுன் பன்னிரண்டு பாட்ட மழை.

ஐப்பசி மாதம் பிறையைக் கண்ட வேளாளா கைப்பிடி நாற்றைக்கொண்டு கரையேறு.

### கார்த்திகை மாதம்

காய்ந்தால் காயும் கார்த்திகை.

கார்த்திகை கன மழை.

கார்த்திகை கண்டு கலம் வில்லு.

கார்த்திகைக்கப்பால் மழையுமில்லை. கர்ணனுக்கப்பால் கொடையுமில்லை.

கார்த்திகைக்குப் பிறகு கால் கோடை.

கார்த்திகைக்கு மேல் மழையுமில்லை, கர்ணனுக்கு மேல் கொடையுமில்லை.

கார்த்திகைக்கு மிஞ்சின (பின்) மழையுமில்லை, கர்ணனுக்கு மிஞ்சின (பின்) கொடையுமில்லை.

கார்த்திகைப் பிறை கண்டாற் போல.

கார்த்திகை மாதத்து மழையில் கல்லுக்குள்ளிருக்கும் புல்லுங் கதிராகும். ,

கார்த்திகை மாதத்திற் கடுமழை பெய்தால், கல்லின் கீழ் இருக்கிற புல்லும் கதிர்விடும்.

கார்த்திகை மாசத்து மழை கலங்கழுவுவதற்கு முன்னே வந்து போகும்.

கார்த்திகை மாதம் கலங்கழுவ மழை விடாது.

கார்த்திகை மாதம் கால் நாழிகைப் பொழுதிருந்தாலும் காற்றடிக்கும், விளக்கிட்டால் மழை கிழக்கிடும்.

கார்த்திகைப்பிறை கண்ட வேளாளா கைநாத்துடன் கரையேறு.

### மார்கழி மாதம்

மார்கழிக் கோடை மரம் வெட்டிச் சாய்ந்தாற் போல்.

மார்கழி முடிந்தால் மழையுமில்லை, பாரதம் முடிந்தால் படையுமில்லை.

மார்கழி மத்தியில் மாரி பொழிந்தால் சீரொழுகும் பயிர்களுக்கு க்ஷேமமிக உண்டாகும்.

மார்கழி மழை மண்ணுக்குதவாது.

மார்கழி மாதம் மரமும் நடுநடுங்கும்.

சோவியத் வர்த்தக கைத்தொழிற் காட்சியை சோவியத் வெளிநாட்டுப் பிரதம மந்திரி திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றுகிறார்.



# பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள்

**(அ) பலநோக்கச் சங்கங்களுக்குச் சார்பான அறிகுறிகள்.**—ஆசியாவின் ஏனைய பாகங்களைப் போல் இலங்கையிலும் யுத்தம் முடிந்தபின்னர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்ய வேண்டுமென்ற எண்ணம் உருப்பெற்றது.

நாணய சங்கமும் விற்பனவு சங்கமும் ஒன்றிலொன்று தங்கியிருப்பதால், இவையிரண்டும் ஒத்துழைக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் உற்பத்தியாளர் கூட்டுறவின் ஆரம்பக்காலம் தொட்டு இருந்து வந்திருக்கிறது. இது காரணமாகவே, ஓர் அங்கத்தவருக்கு விளைபொருளின் கணக்கில் கொடுக்கப்படவேண்டிய பணம், அவர் அங்கத்துவம் பெற்ற ஒரு நாணய சங்கம் அக்கிராமத்தில் இருக்குமாயின், அதன் மூலமே கொடுக்கப்படவேண்டுமென்ற ஏற்பாடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் உபவிதிகளில் சேர்க்கப்பட்டது.

உற்பத்திக்கு வேண்டிய கடன் வசதிகளையும் விற்பனவு வசதிகளையும் கொடுக்கும் விவசாயப் பொருள் உற்பத்தி—விற்பனவுச் சங்கங்கள் 1947 ம் ஆண்டில் தோன்றியதும் இவ் வெண்ணத்தை வெளிப்படுத்துகின்றன.

5 ம் அதிகாரத்தில் விபரிக்கப்பட்ட "இணைப்புத் திட்டம்" அடுத்தபடி. இதில் நுகர்ச்சியாளர் சங்கங்களும், உற்பத்தியாளர் சங்கங்களும், கிராமிய நாணய சங்கத்துடன் இணைக்கப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்று சேர்ந்தது ஈற்றில் ஒரு கிராமத்தின் எல்லாப் பொருளாதார முயற்சிகளும் ஒரு கூட்டுறவுச்சங்கத்தால்—அதாவது பல நோக்கச் சங்கத்தால்—நடத்தப்படவேண்டுமென்பதற்கு வழிகாட்டியாயிற்று.

1953 ம் ஆண்டு தொடக்கம் இலங்கையிற் பல நோக்கச் சங்கங்கள் உண்டு. இவை கல்லோயா முன்னேற்ற மன்றத்தின் முயற்சியால் தோன்றியவை. "பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கங்கள்" என்றழைக்கப்படும். சங்கங்கள் அங்கத்தவருக்கு வேண்டிய நுகர்ச்சிப் பொருட்களையும் உற்பத்திப் பொருட்களையும் வழங்குவதுடன் அவர்களின் விளைபொருளை விற்கவும் ஒழுங்கு செய்கின்றன. இவ்வகைச் சங்கங்களின் தொகை 1957 ம் ஆண்டில் 34 இலிருந்து 36 க்கு ஏறியிருக்கிறது. அங்கத்தவர் தொகை 5,030; மொத்தத் தொழில் முதல் ரூபா 15 இலட்சம். இவற்றின் மொத்த விற்பனவு ரூபா 50 இலட்சம்; 1956 ம் ஆண்டின் தொகை ரூபா 30 இலட்சம்; 1957 ம் ஆண்டில் சுத்த இலாபம் ரூபா 73,500; அதற்கு முந்திய ஆண்டில் இலாபம் ரூபா 47,200.

போமிரியாவில் இன்னுமொரு விதமான இணைப்பு காணப்படுகிறது. அங்கே ஒரு பெரிய பால் உற்பத்தியாளர் சங்கம் 1954 ம் ஆண்டு தொடக்கம் அங்கத்தவருக்கென ஒரு பண்டசாலை நடத்தி வருகிறது. இதன் பயனாகக் கிராமிய வியாபாரிமாருக்குக் கடன்பட்டிருந்த பாற்பண்ணையாளர் இன்று கடனின்றி வாழ்கின்றனர்.

**(ஆ) அமைச்சரின் ஆணை.**— விவசாய—உணவு அமைச்சின் திட்டம் போடும் சிற்சபை, விவசாயக் கூட்டுறவில் செய்யப்படவேண்டிய மாற்றங்களைக் குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அமைச்சர் நியமித்த விசாரணை மன்றத்தின் இடைக்கால அறிக்கையைப் படித்தபின்னர், பல நோக்கச் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று சிபார்சு செய்தது. கூட்டுறவு முன்னேற்றம் சம்பந்தமாக அரசாங்கத்தின் நோக்குமுறை கௌரவ மந்திரியவர்களால் 1. 7. 1957 ல் பின்வருமாறு வெளியிடப்பட்டது :—

**பலநோக்கக் கிராமிய கூட்டுறவுச் சங்கங்கள்**

"இலங்கையின் கூட்டுறவு இயக்கம் 45 ஆண்டுகளுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், நீண்டகால அனுபவத்திற்கேற்ற உறுதியும் முதுமையும் பெறுதிருப்பது துக்கத்திற்குரியது.

இயக்கம் ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் வளர்வதற்கு இரண்டு அடிப்படையான குறைகள் உண்டென்பது எனது முடிவு.

முதலாம் குறை பிழையான கொள்கையிலிருந்தெழுவது. அரசாங்கம் மக்களின் பொருளாதார வாழ்விலும் சமூக வாழ்விலும் தலையிடக்கூடாதென்ற கொள்கை இருந்த காலத்திலேயே கூட்டுறவு இயக்கம் ஆரம்பமானது. அரசாங்க உதவியன்றி சுய உதவியே விரும்பத்தக்கதென்பதும், தனக்குத்தானே உதவிசெய்தவர்களுக்குக் கடவுள் உதவி செய்வாரென்பதும் அக்கால நம்பிக்கையாயிருந்தது. கூட்டுறவு இயக்கத்தின் மூலம் இக்கொள்கை மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. கட்டுப்பாடில்லாத பொருளாதார ஆற்றல்களால் மேற்கொள்ளப்பட்டவர் அவற்றினின்றும் தப்பமுயன்றனர். ஆகவே அரசினர் பொதுமக்களின் பொருளாதார, சமூக வாழ்வில் எதுவிதத்திலும் ஈடுபடாத காலத்திற் தோன்றிய பொருளாதார சமூக ஏற்பாடு, அர

சினர் பொருளாதாரச் சமூகவிடயங்களிற் தலையிடும் காலத்தில், அவ்வித ஏற்பாட்டின் அடிப்படைக்கொள்கை மாறினலன்றி பயன் படாதென்பது தெளிவு. சுருங்கக் கூறில், இன்றைய கூட்டுறவு இயக்கம், தனது நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமாயின், ஒரு சிலகுழுவினரின் தேவைகளைப் பூர்த்தி செய்தால் தனது கடமை முடிந்து விட்டதென்ற பழைய கொள்கையைக் கைவிடல் வேண்டும். கூட்டுறவு இயக்கத்தின் இன்றைய பணி, விசேடமாகப் பிற்போக்கான நாடுகளில், மிகவும் முக்கியமானது. அது அரசாங்கத்துடன் ஒத்துழைத்து நாட்டின் முன்னேற்றத்திற்குத் தொண்டாற்ற வேண்டும். இவ்வாறு செய்யுங்கால், இயக்கத்திற் சேர்ந்திருக்கும் பற்பல குழுவினரின் சொந்த நலன்களும் பாதுகாக்கப்படுகின்றன.

பழைய கொள்கையைப் பின்பற்றினமையால் இலங்கையின் கூட்டுறவு இயக்கம் கடந்த 45 ஆண்டுகளாக ஒடுங்கின எல்லைகளுக்குட்பட்டு வளர்ச்சிகுன்றி நின்றது. பங்கீட்டுப் பொருட்களைக் கூட்டுறவுப் பண்டசாலைகள் மூலம் வழங்கின பொழுதும் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் விளைபொருளை வாங்குவதற்கு விவசாயப் பொருள் உற்பத்தி—விற்பனவுச் சங்கங்களைப் பயன்படுத்தின பொழுதிலும், இயக்கத்தின் வளர்ச்சியைத் தடைசெய்த சில முட்டுக்கட்டைகள் முறிக்கப்பட்டது உண்மையெனினும், இது கூட்டுறவுக் கொள்கையின் வேறுபாட்டால் ஏற்படாமல் காலத்திற்கேற்கச் சில தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே நிகழ்ந்தது. இது தற்காலிகமாக நிகழ்ந்த தென்றும், அவசியங்கருதி கூட்டுறவுக் கொள்கைகள் மீறப்பட்டன வென்றும் “கலப்பற்ற” தூய்மையான கூட்டுறவுக் கொள்கைகள் மீண்டும் நடைமுறைக்கு வருமென்றும் இன்னும் சிலர் காத்திருக்கின்றனர்.

நான் குறிப்பிட்ட இரண்டாம் குறைவு அமைப்பைப் பொறுத்தது. பற்பலவகைச் சங்கங்களைக் கொண்டிருப்பது இலங்கை இயக்கத்தின் தனிச் சிறப்பென்று கருதுகிறேன். 70 வகைப்பட்ட 10,500 சங்கங்கள் இலங்கையிலுண்டு. இவ்வாறு இயக்கம் பலவாறு பிரிந்திருப்பதால் அதிக நேரமும் ஆற்றலும் வீணுகின்றன. ஒருவன் நுகர்ச்சியாளனுகவும், கடனளியாகவும், நெல் விற்பனையாளனுகவும், பால் விற்பனையாளனுகவும், தும்புப் பொருள் விற்பனையாளனுகவும், தனது கிராமத்திலும் அப்பாலும் இருக்கும் பற்பல சங்கங்களைச் சேர வேண்டியிருப்பதால் ஒரு சங்கத்திலும் வேண்டிய கரிசனை செலுத்த முடியாமலிருக்கிறான். காலஞ் செல்லச் செல்ல அவனுடைய கரிசனை குறைந்து, விழிப்புக் குன்ற, சங்க உத்தியோகத்தரும் பணியாளரும் கட்டுப்பாடின்றித் தம்மெண்ணப்படி கடமையாற்ற முற்படுகின்றனர். அளவுக்கு மிஞ்சின பல சிறிய சங்கங்கள் ஆங்காங்கு சிதறிக்கிடப்பதால், அவற்றை எண்பார்வை செய்வதும் மேற்பார்வை செய்வதும் கூட்டுறவுத்துறை உத்தியோகத்தருக்குக் கடினமாகிறது. போதியளவு திறமையுள்ள மனேஜர்மார் இல்லாக்குறையும், ஒவ்வொரு சிறிய சங்கமும் குறைந்த சம்பளத்தில் ஒவ்வொரு மனேஜரை நியமிப்பதால் இன்னும் மோசமாகிறது.

இலங்கையின் இயக்கம் பலவகைப்பட்டதாய் தோன்றின பொழுதிலும் உண்மையில் அப்படியன்று. எல்லாச் சங்கங்களையும் இரண்டொரு பெரிய பிரிவுகளில் அடக்கலாம். —அதாவது நாணய சங்கமும் சந்தைப்படுத்தற் சங்கமும். சந்தைப் படுத்தற் சங்கத்தைக் கொள்வனவு சங்கமென்றும் (அதாவது அங்கத்தவருக்கு வேண்டிய பொருட்களைக் கூட்டுறவு முறையில் கொள்வனவு செய்யும் சங்கம்—இது பெரும்பாலும் பண்டசாலையென்று அழைக்கப்படுகிறது) விற்பனவு சங்கங்களென்றும் (அதாவது அங்கத்தவரின் விளைபொருளைக் கூட்டுறவு முறையில் விற்பனவு செய்யும் சங்கம்) மீண்டும் பாகுபாடு செய்யலாம். விற்பனவுச் சங்கங்கள் என்ற பிரிவில் வனைதற் சங்கங்கள், பாற்பண்ணைகள், விவசாயப் பொருள் உற்பத்தி—விற்பனவுச் சங்கங்கள் முதலியன அடங்கியிருக்கின்றன. உண்மையில் விவசாயப் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கமென்ற பெயர் பிழையானது. ஏனெனில் அச்சங்க அங்கத்தவர் விவசாயப் பொருட்களின் உற்பத்தியிலல்ல விற்பனவிலேயே கூட்டுறவு முறையை அனுசரிக்கின்றனர். நிலம் உட்பட உற்பத்திச் சாதனங்களை ஒன்ருக்கி ஈற்றில் சொந்தமாக்கிய பின்னரே இவ்வகைச் சங்கம் உற்பத்திச் சங்கம் என்றழைக்கப்படலாம்.

இயக்கம் உறுதி பெறுவதற்கு மட்டுமல்ல, தொடர்ந்து நடைபெறுவதற்கும் அதன் அமைப்பு மாற்றப்படவேண்டியது அவசியமென்றெண்ணுகிறேன். பலவகைச் சங்கங்களை ஒழித்து ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பல நோக்கச் சங்கத்தை அமைப்பதே விரும்பத்தக்கது. விவசாய அமைச்சின் திட்டம்போடும் சிற்சபையும், அண்மையில் நிறுவப்பட்ட விவசாயக் கூட்டுறவு விசேட ஆராய்ச்சிக் குழுவும் இம்முறையை சிபார்சு செய்திருக்கின்றன. கிராமிய கூட்டுறவுச் சங்கத்தின் முக்கிய பணிகள் கடன் வழங்கல், கொள்வனவு, விற்பனவு ஆகிய மூன்றுமே. ஒரு கிராமத்தில் ஒரு பல நோக்கச் சங்கம் அமைக்கப்பட்டதும், பங்கீட்டுப் பொருட்களை விநி

யோகம் செய்வதும், உத்தரவாதவிலேத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்தலும், உரம் முதலிய பொருட்களுக்கு அரசினர் உதவிப்பணம் அளிப்பதும் இச்சங்கமூலமே செய்யப்படும். இச்சங்கத்தைச் சேரா தவருக்கு இதன் சேவை கிடையாது. போதியளவு சங்கங்கள் அமைக்கப்பட்ட பின்னர், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் இறக்குமதி செய்யும் பொருட்கள் யாவும் இவை மூலமே விற்கப்படும். தனிப்பட்ட ஒப்பந்தக்காரனை நீக்கிக் கிராமத்தின் பல்வேறு வேலைகளுக்குத் தொழிலாளரை ஒழுங்கு செய்வதும் இச்சங்கத்தின் பணியாகலாம். கிராமத்தின் விவசாயத் திட்டத்தைத் தயாரிப்பதும், அரசினர் அதை அனுமதித்தபின் நடைமுறைக்குக் கொண்டுவருவதும் கிராமிய கூட்டுறவுச் சங்கத்தின் கடமையாகும். சுருங்கக் கூறின் கூட்டுறவு உற்பத்தியை (அதாவது உற்பத்தியாளர் உற்பத்திச் சாதனங்களை ஒன்ருக்கி ஈற்றில் பொதுச் சொத்தாக்கல்) ஒழிந்த கிராமத்தின் கூட்டுறவு வாழ்வின் ஏனைய அம்சங்கள் யாவும் கிராமக் கூட்டுறவுச் சங்கத்தின் மேற்பார்வையில் வரும். உற்பத்தியின் பல்வேறு பிரிவுகளுக்குச் சங்கங்கள் வெவ்வேருக அமைக்கப்படும். திருப்தியுடன் கடைமையாற்றிவரும் மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதமுள்ள நாணய சங்கங்களையும் நான் குலைக்க விரும்பவில்லை. இவை கடனுதவியளிக்கும் பல நோக்கச் சங்கங்களுடன் அக்கம் பக்கமாகக் கடமையாற்றிக்கொண்டிருக்கும். ஒரு கிராமச் சங்கத்தின் பிரிவிலுள்ள கிராமிய சங்கங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சமாசத்தை நிறுவலாம். இவை ஈற்றில் இலங்கை முழுவதிலும் தொண்டாற்ற வேண்டிய மொத்த விற்பனைச் சங்கம், பிரதம வங்கி, போன்ற சம்மேளனங்களைத் தொழிலின்படி அமைக்கலாம்.

நான் மேற்தந்த திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குதவியாக ஆரம்பத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு கூட்டுறவு முன்னேற்றச் சிற்சபை அமைக்க வேண்டும். இதற்கு எல்லாக் கூட்டுறவுப் பரிசோதகருக்கும், விவசாய ஆசிரியருக்கும், உணவு உற்பத்தி மேற்பார்வையாளருக்கும், ஒரு குறித்த தொகையான கிராமங்கள் பிரித்துக் கொடுக்கப்படும். இவர்கள் கூட்டுறவின் ஆக்க உதவி ஆணையாளரின் ஆலோசனைப்படி கடமையாற்றி இவ் ஆண்டு செப்ரம்பர் மாதம் முடியு முன் ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டங்கள் வைத்து 9-15 அங்கத்தவரைக்கொண்ட கூட்டுறவு முன்னேற்றச் சிற்சபைகளைத் தெரிவு செய்தல் வேண்டும். கூட்டுறவுப் பலநோக்கச் சங்கம் அமைக்கப் படுவதற்குதவியாக ஆயத்தங்கள் செய்வதும், அது தோன்றும்வரை விவசாய விடயங்களில் திட்டம் போடுவதும் இச்சிற்சபையின் கடமைகளாகும்.

அடுத்த மூன்று ஆண்டுகளிலும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பல நோக்கச் சங்கம் அமைக்க முயற்சியெடுக்க வேண்டுமென்று கூட்டுறவுத்துறைக்குக் கட்டளை விடுத்திருக்கிறேன். இதைச் செய்வதற்குதவி புரியுமாறு பொதுமக்களையும் எனது அமைச்சிலும் வெளியிலுமுள்ள அரசாங்கத் துறை உத்தியோகத்தரையும் அன்பாய்க் கேட்டுக் கொள்கிறேன்".

**(இ) கூட்டுறவு முன்னேற்றச் சிற்சபைகள்.**—அமைச்சரின் ஆணைப்படி கூட்டுறவுத்துறை கூட்டுறவு முன்னேற்றச் சிற்சபைகளை நிறுவ நடவடிக்கையெடுத்தது. கூட்டுறவுப் பரிசோதகர்களும், விவசாய ஆசிரியரும், உணவு உற்பத்தி மேற்பார்வையாளரும் ஏறத்தாழ எல்லாக் கிராமங்களிலும் கூட்டங்கள் வைத்துப் புதுமுறையை மக்களுக்கு விளக்கினர். ஒவ்வொரு கிராமத்திற்கும் (கிராமங்கள் மிகச் சிறியதாயின் இரண்டு மூன்று கிராமங்களை ஒன்ருக்கி) ஏறத்தாழ 15 அங்கத்தவரைக் கொண்ட ஒரு சிற்சபை கிராமவாசிகளால் தெரிந்தெடுக்கப்பட்டது. குறித்த கிராமத்திற்கு அல்லது கிராமத் தொகுதிக்கு ஒரு பல நோக்கச் சங்கத்தை அமைப்பது இச்சிற்சபையின் கடமையாகும்.

கிராம வாசிகளுக்கு முதலிடம் கொடுக்கும் நோக்கத்துடனேயே உத்தியோகப் பற்றற்றவர் சிற்சபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டனர். புதிய முறையை ஏனையவருக்கு நன்கு விளக்கி, மக்கள் தாமே புதுச் சங்கத்தை விரும்பிக்கோரச் செய்வது சிற்சபை அங்கத்தவரின் பணியாகும். இலங்கை போன்ற பிற்போக்கான நாடுகளில் அரசாங்கமே கூட்டுறவின் விருப்பையும் கூட்டுறவுச் சங்கங்கள் வளரக்கூடிய நிலைபரத்தையும் உண்டாக்க வேண்டும். பல நோக்கச் சங்கத்தின் கருத்தையும் நன்மையையும் பொது மக்களுக்கு விளக்குவது கூட்டுறவு முன்னேற்றச் சிற்சபையின் முக்கிய கடன். வழக்கமான அமைப்பு முறை எடுக்கும் காலத்திலும் குறுகிய காலத்தில், மக்களை இயக்கத்திற் சேர்த்து புதுக் கூட்டுறவுச் சங்கத்தின் நன்மைகளை நாடு அறியச் செய்ய இச்சிற்சபை முறை பெரிதும் பயன்பட்டது. அரசாங்க உத்தியோகத்தர் மட்டும் இப்புது முறையைப் பிரசாரம் செய்வதாயின், மக்கள் அதை விளங்கிக்கொள்ள நீண்டகாலம் எடுத்திருக்கும். அரசாங்க உத்தியோகத்தருடன் பொதுமக்களையும் சேர்த்துவிட்டது காரணமாக அரசாங்கத்தின் முயற்சிகள் அனுகூலமடைவதற் கேதுவான ஊக்கமும் உற்சாகமும் தோன்றியிருக்கின்றன. (தொடரும்)

# தென்னிந்திய கோயிற் கட்டடக் கலை

[திரு. ம. பொ. செல்வரத்தினம்]

தென்னிந்தியாவில் வானளாவிய கோபுரங்கள் தண் வயல் சூழ்ந்த பிரதேசங்களுக்கிடையே தென்னையையும் விஞ்சித் தோற்றமளிப்பது சர்வசாதாரண காட்சியாகும். இக்காட்சி யாத்திரீகர்களை வியப்பிலும் பரவசத்திலும் ஆழ்த்திவிடுகிறது. நீண்டுயர்ந்த கோபுரங்களைக்கொண்ட இவ்வாலயங்கள் திவ்விய சேத்திரங்களாகும். இங்கு பல்லாண்டுகட்கு முன் ஏதோ ஒரு உருவில் தெய்வங்கள் பிரதிஷ்டை பண்ணப்பட்டமையின், அக்காலந் தொட்டு இத்தலங்கள் தெய்வபக்திக்கும், கலாபிவிருத்திக்கும் நிலைக்களனுக விளங்குகின்றன. இத்திவ்விய சேத்திரங்கள் அதன் கம்பீரமான தோற்றத்திலும் அழகுப் பொலிவிலும், கலைவளத்திலும் மக்களை ஈர்த்து நின்று பரம் பொருளை அடைய ஏதுவாக விளங்குகின்றன. அதனுல் தெய்வபக்தியும் புனித வாழ்வும் மேலோங்குகின்றன.

## கட்டடக் கலை ஆரம்பம்

இந்தியாவில் கோயிற்கட்டடக்கலையின் தொடக்கத்தை கி. மு. 2 ஆம் நூற்றுண்டுக்கு முன்னெடுத்துச் செல்வர். கங்கா நதிப் பள்ளத்தாக்கில் ஆலயங்களிருந்ததற்கு அறிகுறிகள் காணப்பட்டதென்றுங் கூறுவர் ஆராய்ச்சியாளர்கள். போபால் சமஸ்தானத்தில் பெசாக நகரில் செங்கல்லில் நிர்மாணிக்கப்பட்ட வைஷ்ணவ ஆலயம் கி. மு. 2 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த தென்பர். "எங்கும் கடவுள் எல்லாம் கடவுள்" என்பது இந்து மதக் கோட்பாடாகும். இப்பரம்பொருளை அடைதற்கு வெவ்வேறு சாரார் மக்களின் மன நிலைக்கும் தகுதிக்கும் ஏற்ப வெவ்வேறுன உருவ வழிபாடுகளை நிலைநாட்டினர். ஒரு பக்தன் தனது மனத்தை ஒன்றிலே செலுத்துவதற்கு ஒரு ஸ்தூலமான பொருள் வேண்டியமையின் உருவ வழிபாடு எழுந்தது. இவ்வாலயங்கள் பற்றியும், தெய்வ உருவங்கள் முதலியன குறித்தும் பல்வேறு நுணுக்கமான விதிகள் வகுக்கப்பட்டன. சிற்ப சாஸ்திரங்களும், ஆகமங்களுங் கூறுவன இதுவேயாகும். கர்ணபரம்பரைக் கோட்பாடுகளுக்கு இணங்கவே, தென்னிந்திய ஆலய நிலையங்கள் கொள்ளப்படுகின்றன. தெய்வ உருவங்களின் இயல்புகளுக்கு இணங்கவே நிலையங்களும் கொள்ளவேண்டும். தெய்வ உருவங்களின் வெவ்வேறுன கோலங்களுக்கு ஏற்ப வெவ்வேறுன இடங்கள் சிற்ப சாஸ்திரவிதிகளில் கூறப்படுகின்றன. ஆற்றங்கரை, ஆறுகளின் சங்கமம், கடற்கரை, கிராமங்கள், மலைஉச்சிகள், மலைச்சாரல்கள், பெரியார்கள் வாழ்ந்த அல்லது வாழும் பிரதேசங்கள் முதலியன ஆலயங்கள் நிர்மாணிப்பதற்குத்தகுந்த நிலையங்களாகக் கருதப்பட்டன. கோயிற்கட்டடக் கலை மிகப் புராதனமானதும், மிக முக்கியமானதுமான ஒரு கவின்கலையாகும். தென்னிந்தியாவில் கட்டப்பட்டிருந்த ஆலயங்களைப் பற்றிய குறிப்புக்களை, ஐம்பெருங்காவியங்களில் ஒன்றுகிய சிலப்பதிகாரங் கூறுகிறது. ஆதலின் கோயிற் கட்டடக் கலையின் தொன்மையை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்கே எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. இக்காரணத்தால் இக்கவின்கலையின் காலத்தை இன்னதென்று திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை.

## மூன்ரும் நூற்ருண்டு

சரித்திரகாலத்தைப் பற்றிப் பேசுமிடத்து 3 ம் நூற்ருண்டு தொடக்கம் ஆலயங்கள் இருந்ததற்குத் தக்க சான்றுகள் கிடைக்கின்றன. திராவிட சிற்பக்கலைக்கு முதன் முதலாகப் பணிபுரிந்தவர்கள் பல்லவ அரசர்களாவர். 3 ம் நூற்ருண்டுக்கு முன்பே பல்லவர்கள் பல துறைகளிலும் முன்னேறி நின்றனர். அவர்களுடைய தலை நகர் காஞ்சியில் விளங்கியது. பல்லவ அரசர்கள் கல்வியறிவிலும், படைச் சிறப்பிலும் புகழ் படைத்து விளங்கினர். நுண்கலைக்கு அரும்பணியாற்றினர். பல்லவர்களுடைய புகழ் உச்சநிலையடைந்த காலமாகிய கி. பி. 4 ம் நூற்ருண்டு தொடக்கம் 9 ம் நூற்ருண்டுவரை கோயிற்கட்டடக்கலையும் ஒரு தனிவிருத்தி யடைந்தது. இவர்களுடைய ஆரம்ப சிற்பக்கலையினை மகேந்திர வர்மன் காலத்து (610—640 கி. பி.) மாமல்லபுரம், சித்தன்னவாசல், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் காணக்கூடியதாயிருக்கிறது. ஆரம்ப காலத்தில் பல்லவர்கள் மலைகளைக்குடைந்து தூண்கள் கொண்ட மண்டபங்களாக்கி அடிப்பகுதியில் சிறு கோயில்களையுந் தாபித்தனர். இவ்வரசனது ஆட்சியின் பிற்பகுதியில் பல்வேறு அடுக்குகளைக் கொண்ட அலங்கார வேலைப்பாடுகள் ஆரம்பமாயின. இச்சிற்பக்கலை வளர்ச்சியே, நரசிங்கவர்மன் காலத்தில் (கி. பி. 640—668) சிற்பக் கலைக்களஞ்சியமாக விளங்கும், மாமல்லபுர இரதங்கள் தோன்றுவதற்குக் காரணமாகவிருந்தது. அக்காலத்தில் மாமல்லபுரம் பெருங்கப்பல் துறையாய் விளங்கியமையின் அச் செல்வச் சிறப்பை உணர்த்த, அங்கு பொலிந்து விளங்கிய கருங்கற்பாறைகளில் அழகு கொள்ளும் சிற்ப வேலைப்பாடுகளைப் பொழிந்து சென்றனர் சிற்பிகள் என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. அக்

காலத்தில் பொலிந்து விளங்கிய கோட்டைகளினதும், அரண்மனைகளினதும் அத்திவாரத்தின் அறிகுறிகளை இன்றும் காணக்கூடியதாயிருக்கிறது. இங்கு காணப் படும் பல்வேறு சிற்பங்களில் அருச்சுனன் தவ நிலையைக் காட்டுஞ் சிற்பம் பல்லோர் மனதையும் ஈர்த்து நிற்கிறது. புனிதமான கங்காநதி இமயமலையிலே உற்பத்தியாகிப் பூமியிலே பிரவாகிக்கிறதையே கல்லில் ஒட்டுவமையாக அருச்சுனன் தவநிலைச் சிற்பலங்காரஞ் சித்திரிக்கிறது என்று கூறுவர். 7 ஆம் நூற்றாண்டு கி. பி. 690 தொடக்கம் 800 வரை கோயிற் கட்டடக் கலையில் ஒரு புதிய சகாப்தம் தொடங்கிற்று. மலைகளைக் குடைந்து ஆலயங்களை அமைப்பதிலும் பார்க்க, பெருங்கற்களைப் பொழிந்து ஆலயங்களை நிர்மாணிப்பதிலேயே சிற்பிகள் தங்கள் ஆற்றலைச் சுதந்திரமாக கையாள முடிந்தது. இதன் விளைவால், மகாவலிபுரக் கரையோர ஆலயம், கைலாசநாதர் ஆலயம், வைகுந்தப் பெருமாள் ஆலயம் முதலியன எழுந்தன. ஆயிரமாண்டுகளுக்கு மேல் சென்றும், கடல் திரை, பெயர்ச்சிக்காற்று முதலியவற்றால் தாக்கப்பட்ட போதும், இன்னுஞ் செம்மையாகப் பொலிகிறது. மாமல்லபுரக் கடலோர ஆலயம். இதனால் புதிய முறையின் சிறப்பு வெளிப்படையாகிறது. இப் பல்வேறு ஆலயங்களிலிருந்து கோயிற் கட்டடக்கலையைச் செம்மையாகத் தொடங்கி வைத்தவர்கள் பல்லவர்களே என்பது புலனாகிறது. இக்கலையைப் பேணி வளர்த்த பெருமை சோழர்களையும் அவர்களைத் தொடர்ந்த அரசுகளையுஞ்சாரும்.

### பல்லவர்பணி

பல்லவர்கள் கோயிற்கட்டடக்கலையைக் கடல் கடக்கச் செய்து இந்துனிசியா, கம்போடியா ஆதியாம் நாடுகளுக்கும் பரப்பினர். தொடர்ந்த காலத்தில் பல்லவர் சோழர்கள், சாளுக்கியர் முதலியோரிடையே யுத்தங்கள் மிகுந்தமையால் தமிழ் நாட்டில் அமைதி நிலவவில்லை. எனினும் இறுதியில் சோழர்கள் வெற்றியடைந்தனர். வடக்கே கங்காநதி தொடக்கம், தெற்கே இலங்கை வரையும், கிழக்கே பர்மா வரை அவர்கள் சாம்ராச்சியம் செறிந்திருந்தது. 10 ம் நூற்றாண்டுவரை நாட்டில் அமைதியை நிலை நாட்ட முனைந்தனர். இக் காலப் பிற்பகுதியில் சிற்பம், ஓவியம், காவியம் ஆதிய கலை விருத்தியில் முனைந்து நின்றனர். இராசராச சோழன் காலத்தில் (985—1018 கி. பி.) கோயிற்கட்டடக் கலை குறிப்பிடத்தக்க வகையில் விருத்தியடைந்தது. இம் மகா மன்னனின் சிவ பக்தியே மிகப் பிரமாண்டமான இராஜராஜ ஆலயம் தஞ்சையில் கி. பி 110ல் கட்ட ஏதுவாக விளங்கியது. அதனோடு சிற்பிகளின் கலைத்திறன், வீரம், பெருந்தகைமை முதலியவற்றிற்கு அழியாச் சின்னமாகவும் விளங்குகிறது. இவ்வாலய மத்திய விமானம் 190 அடி உயர்ந்து அதன் சிற்ப மகத்துவத்துக்கு குன்றாக விளங்குவது மன்றி சிற்பக்கலைக் களஞ்சியமாகவும் பொலிகிறது. இக்காலத்தில் எழுந்த கங்கை கொண்ட சோழபுர ஆலயம் இராசேந்திர சோழனால் (1018—1033) கட்டப்பட்டது. திருப்புவனம், திருவாரூர், சிதம்பரம், திருவானைக்காவல் முதலிய விடங்களில் உள்ள ஆலயங்களும் சோழர் சிற்பக்கலைக் குச் சான்றாக விளங்குகின்றன.

### 12 ம் நூற்றாண்டு

12 ம் நூற்றாண்டில் சோழர்கலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. சோழ அரசு நிலை குன்றப் பாண்டியர் தலைமைதாங்கத் தொடங்கினர். சோழர் காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் சிற்ப அலங்காரம் முதலியவை யெல்லாம் கர்ப்பக்கிரகத்தையே அடிப்படையாகக் கொண்டது. ஆலய மத்திய விமானம் அலங்காரத்தோடு பொலிந்தன்றி வேறு பகுதிகளுக்கு முக்கியத்துவங் கொடுக்கப்படவில்லை. ஆனால் பாண்டியர் காலத்திலோ வெனில், ஆலயமத்திய விமானமும் கர்ப்பக்கிரகமும் சிற்பசாஸ்திர விதிகளுக்குக் கட்டுப்படுத்தப்பட்டமையின், ஆலயத்தின் பிற பகுதிகளே சிற்ப வேலைப்பாட்டுக்குப் பெயர் பெற்றன. ஆதலின், ஆலயம் மதில்களால் சூழப்பட்டு உள் முற்றங்களும் பல்வேறு சுற்றுப் பிரகாரங்கள் கொண்டு, நாற்றிசையிலும் சிற்பவேலைப்பாடமைந்த கோபுரங்களோடு பொலிந்து விளங்கின. தென்னிந்தியாவிற்குச் செல்பவர்களின் மனதை முதலாகக் கவரச்செய்வது கோபுரங்களாகும். பாண்டியர்கள் அரசு செலுத்திய காலத்தில் ஆலயங்களைக் கட்டியபோதும், பெரும்பாலும் முன்னிருந்த ஆலயங்களே புதிப்பிக்கப்பட்டுப் பெரிதாக்கப்பட்டன. உதாரணமாக ஜம்புகேஸ்வர ஆலயம் சோழர் கலைப்பாணியிலமைந்ததெனினும், பாண்டியாராலே திருத்தப்பட்டுச் சுந்தர பாண்டிய கோபுரத்தையும் பெற்றது. இதேபோன்று, சிதம்பரம், மதுரை முதலிய இடங்களிலமைந்த ஆலயங்களையும் விருத்தியடையச்செய்து புதுக் கட்டுமானங்களையும் நிர்மாணித்துக் கோயிற் கட்டடக் கலையை வளமுறச் செய்தனர் பாண்டியர்கள்.

### 14 ம் நூற்றாண்டு

14 ம் நூற்றாண்டு நடுப்பகுதியில் கோயிற் கட்டடக் கலையின் இன்னும் ஒரு புது மாறுதல் தென்பட்டது. தமிழ்நாடெங்கும் பல்வேறு வகைப்பட்ட கட்டுமானங்கள் எழுந்தன. மக்களும் ஒரு குதூகலமான வாழ்வில் புகுந்து கலையார்வமிக்கு விளங்கினர் என்று கூறுவர்.

இதற்கு அடிப்படையாக விளங்கியது விஜய நகர் அரசாகும். அன்னிய ஆதிக்கங்களால் இந்து சாம்ராச்சியத்துக்கே அல்லல் ஏற்பட்ட காலத்தில், விஜய நகர மன்னர்கள் தோன்றி இந்து மதத்துக்கு ஒரு அருட்சி கொடுத்து ஒளிபெறச் செய்தனர். விஜய நகர் சாம்ராச்சியம் கிருஷ்ணு நதி தொடங்கி குமரிமுனை வரை செறிந்திருந்தது. அக்காலத்தில் இந்தியாவிற்கு விஜயஞ் செய்த அன்னிய யாத்திரீகர்கள் விஜய நகர் சாம்ராச்சியத்தின் பெருமையைக் குறிப்பிடாது சென்றது கிடையாது. விஜய நகர் அரசர்கள் இடிந்து சிதைந்த ஆலயங்களைச் சீர்பெற நிர்மாணித்தலிலும், பெருப்பித்தலிலும், வேறு புதுக் கட்டுமானங்களைச் சேர்த்தலிலும் முனைந்து நின்றனர். சிற்பவேலைப்பாடுகளும், தூண் வரிசைகளும் கொண்டதுமான கல்யாண மண்டபத்தை ஆலயங்களுக்குக் கட்டுவித்த பெருமை விஜய நகர் அரசர்களைச் சாரும். திருக்கல்யாண உற்சவ வைபவத்தை நடாத்துவதற்காக அமைந்தது இப்பெரு மண்டபம். பெருமேடையையும் பக்தர்கள் குழுமியிருக்க விசாலமான பெருவெளியையும் கொண்டது. பெரும்உற்சவங்களை ஆலயங்களில் நடாத்தி தெய்வ அனுக்கிரகத்தைப் பெற்றுலே நாடும் அரசும் செல்வமுறும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர் விஜயநகர் அரசர்கள். விஜய நகர்க் கலைப்பாணியில் அமைந்த ஆலயங்களைத் திருப்பதி, கும்பகோணம், காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம், சிதம்பரம் முதலிய பிரதேசங்களில் காணலாம். மாபெருஞ் சக்கரவர்த்தியாய் விளங்கிய கிருஷ்ண தேவராசன் காலத்தில் ஸ்ரீரங்க நாதர் ஆலயத்தில் ராயர் மண்டபமெனப் புகழ் கொண்ட கல்யாண மண்டபத்தில் அமைந்த பெருந் தூண்கள் விஜயநகர்ச் சிற்பச் சிறப்பை இன்றுங் காட்டுகிறது. மூர்க்கங்கொண்ட குதிரைகள், புஷ்டியான குதிரை வீரர்கள் முதலியவற்றைச் சித்தரிக்கும் எழில்மிக்க சிற்பங்கள் மனோரம்யமானதும், பராக்கிரம மிக்கதுமான அக்காலத்தை எடுத்துக் காட்டுகின்றன. டெக்கான் பகுதி முகமதியரின் படையெடுப்பால் 1565ல் விஜயநகர் அரசு நிலைகுலைதலும் தமிழ் நாட்டின் இந்துக்கலை அம்சங்கள் தெற்கு நோக்கிச் சென்றன. அதனுல் மதுரை மாநகர் மத்தியாகப் பொலிந்தது.

### 17 ம் நூற்றுண்டு

விஜயநகர் சிற்றரசர்களும், தளபதிகளும் நாட்டைச் சின்னுபின்னமாக்கி, அரசு செலுத்தினர். இத்தொகுதியில் சிறந்து விளங்கியவர், கி. பி. 1623—1659 க்கிடையே அரசாண்ட திருமலை நாயக்கன் என்ற அரசனுவான். இவன் ஆதரவின்கீழ் விஜய நகர் கலைப்பாணி இன்னும் விருத்தியடைந்தது. இதன் தென்னுட்டில் மதுரை, இராமேஸ்வரம், திருநெல்வேலி முதலிய இடங்களிலுள்ள ஆலயங்கள் தெரிவிக்கின்றன. ஆலய ஆதிமூலத்தைச்சுற்றி நிர்மாணிக்கப்பட்ட சுற்றுப்பிரகாரங்கள் இவர்களுடைய சிறந்த ஆக்கப்பாடாகும். இராமேஸ்வர ஆலயத்தைச் சேர்ந்த பெரு வீதிகள் இவ்வாசனுடைய முயற்சியால் எழுந்தன. தென்னிந்திய ஆலயங்களில் மிகப் புராதனமாக விளங்குவது கர்ப்பக்கிரகமாகும். கர்ப்பக்கிரகத்தின்மேல் விமானம் அல்லது கோபுரம் அமைந்திருக்கும். இதற்கு முன்பாக முக மண்டபம் காணப்படும். இங்கு உற்சவ மூர்த்திகள் அபிசேகத்திற்கும், பூசை முதலியவற்றிற்காகவும் கொண்டுவரப்படுகின்றன. இம்முக மண்டபத்தைக் காவல் புரிய இருமருங்கிலும் துவார பாலகர்கள் தாபிக்கப்படும். உற்சவங்களுக்கு, உற்சவ மூர்த்திகளின் அலங்காரம் முதலியன மகாமண்டபம் அல்லது அர்த்த மண்டபத்தில் தான் நடைபெறும். இம்மகா மண்டபம் பெரும் ஆலயங்களில் வெகு வேலைப்பாடுகளுடன் திகழும். இம்மகா மண்டபத்துக்கு எதிரே பலிபீடமும், துவஜஸ்தம்பமும் அல்லது கொடி மரமும் காணப்படும். ஆலய எல்லையில் மதில்கள் கட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு திக்கிலும் கோபுரங்கள் தென்படும். தீர்த்தக் கிணறுகள் ஆலய வீதிகளின் உட்புறத்தில் அல்லது வெளியே அமைந்திருக்கும். ஸ்நானத்துக்கென அமைந்த புஸ்காணிகள் அல்லது திருக்குளங்களும் வீதிகளிலிருக்கும். ஆலய மூலஸ்தானத்தைச் சுற்றி சாதாரண தெய்வங்களினதும், சமய குரவர்களினதும் ஆலயங்கள் தென்படும்.

எனினும் வெகு விமரிசையான சிற்பக்கலைப்பாணியைக்கொண்ட பிரமாண்டமான ஆலயங்கள் பல்வேறு பிரகாரங்களைக்கொண்டிருக்கும். ஸ்ரீரங்கத்து ரங்க நாதர் ஆலயம் ஏழு பிரகாரங்களைக்கொண்டது. இவ்வாலயம் ஸ்ரீரங்க நகரையே உள்ளடக்கியது. தென்னிந்திய கோயில்கள் அதன் துலக்கத்தாலும், மகத்துவத்திலும், பிரமாண்டமான தோற்றத்தாலும் இந்து மக்களைப் பாவசத்தில் ஆழ்த்தி தெய்வபக்தி, புண்ணியம், முதலான சீலங்களில் ஈடுபடச் செய்கிறது. இவ்வாலயங்கள் இந்துக்கலை கலாச்சாரங்களுக்கும் கருவூலமாக விளங்குகின்றன. தற்காலத்தில் கையாளப்படும் நவீன ஆயுதங்கள் கிடைத்தற்கரிய புராதன காலத்தில், இப்பிரமாண்டமான கட்டுமானங்களை எழுப்பிய சிற்ப விற்பன்னர்களின் திறனை எண்ணும்போது எவரையும் திகைப்பிலேயே ஆழ்த்திவிடுகிறது. இவ்வாலயங்கள் இத்தெய்வக்கலைஞரின் புகழுக்கு குன்றின்மேல் வைத்த தீபம் போன்று இன்றும் பொலிந்து விளங்குகின்றன.

(இலங்கை வானெலிப் பேச்சு)

# கலையும் பெண்களும்

[கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள்]

ஒரு நாட்டின் நாகரிகச் சிறப்பை அந்நாட்டின் கலைகளின் மூலமே அறியலாம். கலைகள் வளர்ச்சி பெறாத நாட்டில் மக்கள் நாகரிக இயல்புகள் பொருந்தியவர்களாய் வாழ்தல் கூடுமெனக் கருதுதல் பொருந்தா முடிபாகும். கலைகள் உச்சநிலை அடைந்த நாடே பலராலும் பாராட்டத்தக்க சிறந்த இயல்புகள் வாய்ந்த நாடாகும். எகிப்து, கிரேக்கம், உரோமாபுரி முதலிய பண்டைய நாடுகள் நாகரிகச் சிறப்புடன் வாழ்ந்தனவென நாம் சரித்திரத்திற் படிக்கின்றோம். அந்நாடுகளில் இன்றும் அழிந்து கிடக்கும் மனைகளும், சிற்பங்களும், ஓவியங்களும் அக்காலப் பெருமைக்கு அறிகுறிகளாக விளங்குகின்றன. அந்நாட்டுப் புலவர்கள் எழுதிவிட்டுச் சென்ற சிறந்த இலக்கியங்கள் இன்றும் மக்கள் உள்ளத்திற்கு இன்பத்தையும், அறிவையும் கூட்டிக் கொண்டே இருக்கின்றன.

இந்தியாவும், இலங்கையும் மிகப் பண்டைக்காலந் தொட்டே கலைகளுக்கு இருப்பிடமாக விளங்கிவருகின்றன. இன்று இந்நாடுகளில் கலைகள் முற்காலங்களைப் போன்று வளர்ச்சி பெறாதிருந்தாலும் அக்கலைகள் அழியாது மூலை முடுக்குகளில் மின்னிக்கொண்டிருக்கின்றன. பாரதநாட்டில் அரசர்களும், செல்வர்களும் பொது மக்களும் சிற்பம், ஓவியம், இசை, நடனம் ஆகிய நுண்கலைகளைப் பொன்னேபோல் போற்றிவளர்த்தனர். பூர்வீக இந்தியாவினதும் இலங்கையினதும் அரசியற் சிறப்பும், பொருளாதார மதிப்பும் மறைந்து விட்டன. ஆயினும், இந்நாடுகளின் கலைச்செல்வங்கள் அழியாது பிரகாசித்துக் கொண்டே இருக்கின்றன. இச் செல்வங்களைக் கண்டு களிப்பதற்கும், அவற்றின் சிறந்த இயல்புகளைக் கற்பதற்குமாக இன்று பல்லாயிர மக்கள் பிறநாடுகளிலிருந்து வருவதே அவற்றின் பெருமைக்கு அழியாச் சான்றாகும்.

மேல் நாட்டுக் கலைகளுக்கும், இந்திய கலைகளுக்குமுள்ள வேறுபாட்டைத் தமிழ்மக்கள் நன்குணர வேண்டும். மேலைத்தேசம் அரசியற் துறையிலும், பொருளாதார நிலையிலும், விஞ்ஞான ஆராய்ச்சித் துறையிலும் முற்போக்கடைந்திருப்பதோடு, தனது வாழ்க்கை நோக்கங்களையும், இயல்புகளையும் உலகம் முழுவதிலும் பரப்புவதிலும் கண்ணுங் கருத்துமாக இருந்துவருகின்றதென்பதை நாம் நன்கு அறிவோம். மேல்நாட்டு நாகரிக இயல்புகள் புகாத தேசமோ, கிராமமோ உலகில் இல்லை. எங்கு பார்த்தாலும் மேல்நாட்டு மக்களின் பொருட்களே எங்கள் கண்ணுக்குப் புலப்படுகின்றன. மேல் நாட்டினரின் வாழ்க்கை நலன்களைப் பாடுவதே எமது பத்திரிகைகளின் முக்கிய தொண்டுகளாகி விட்டன. அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி எமது நாட்டு நிலையங்களை அமைப்பதே எமது தேசத் தலைவர்களின் பொழுதுபோக்குகளாகிவிட்டன.

எமது நாடும் மக்களும் தெரிந்தோ தெரியாமலோ ஆங்கில நாகரிகப் போக்கிலே சென்று கொண்டிருக்கின்றார்கள். இந் நிலை எமக்கு நன்மையைத்தரத் தக்கதாவென்பதை நாம் உற்றுச் சிந்தித்து உணர வேண்டும். நாட்டின் மதிப்புக்குரிய பாரம்பரியக் கொள்கைகளையும் வாழ்க்கை முறைகளையும் நாம் கைவிட்டு அந்நியர் முறைகளைப் பின்பற்றுவதனால் நாம் எமது விலைமதிக்க வொண்ணுக் கலைகளும், கலைப்பொருட்களும், அவற்றின் ஆக்குந் திறனும் அழிந்தொழிந்து போவதற்குக் காரணராகவிருப்போம் என்பதில் ஐயமின்று.


ஐம்புல நுகர்ச்சியால் ஏற்படும் இன்பத்தைப் பெருக்குவதே மேலைத்தேசக் கலைகளின் நோக்கம் என்பது அறிஞர் கண்ட முடிபு. இந்தியக் கலைகளின் நோக்கம் மனிதனை இறைவன்பால் இணைப்பதேயாகும். இந் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே எமது தினசரி வாழ்க்கை ஒழுங்குகளும், வாழ்க்கைப் பொருட்களும் அமைந்துள்ளன. வானளாவிய கோபுரங்களையும், அடியார் சரித்திர சம்பவங்கள் சித்திரிக்கப்பட்டுள்ள அழகு வாய்ந்த மண்டபங்களையும் கொண்டு விளங்கும் ஆலயங்கள் மக்கள் மனத்திலே இறைவனின் பெருமையைப் பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும் நினைவூட்டியபடி நிற்கின்றனவன்றோ! அவ்வாலயங்களில் இசைக்கப்படும் இசையும் கசிந்துருகிப் பாடப்படும் பண்களும் மனத்தைப் பரவசப்படுத்த வல்லனவென்பதை எவர் தான் மறுத்தல்கூடும். இந்தியநாட்டு ஆலயங்கள் சிறந்த கலைக் கூடங்களாக அமைக்கப்பெற்றதன் காரணத்தை நாம் நன்கு உணருதல் வேண்டும். இறைவன்பால் மனத்தை அழுத்துதற்குச் சிறந்த துணை கலையேயாகும். அதனாலன்றோ எமது பண்டைய ஆலயங்கள் கலை மயமாக விளங்குகின்றன.

எமது முன்னோர் ஆலயங்களை மாத்திரம் கலா பீடங்களாக அமைத்தார்களன்று. அறிவுடையோர் வாழ்ந்த இல்லங்களும், கல்விச்சாலைகளும், அரண் மனைகளும் கலைக்கோயில்களாக விளங்கின. இல் லங்களில் காணப்பட்ட பொருட்கள் யாவும் கலை வனப்பும், அழகும் பொருந்தியனவாக விளங்கின. பண்டைத் தமிழ் மக்கள் கலையின் துணையைக் கொண்டு அமைத்த இல்லங்களில் நாதவடிவாய் விளங்கும் இறைவனை அன்பொழுகப் பாடிக் கசிந்து ருகி வாழ்ந்தார்கள். இத்தகைய சிறப்பினை எம் நாட்டில் இப்பொழுது காண்பதரிதாகி விட்டது. தமிழ்மக்கள் தங்கள் இல்லங்களை லண்டன், பாரிஸ், கொலிவூட் நகரங்களிற் காணப்படும் மனைகளைப் போலமைப்பதில் பெருமையெடுத்துக் கொள்ளுகின் றனர். வீட்டில் உபயோகிக்கும் பொருட்கள் யாவும் மலிந்த பீங்கானோட்டா லமைந்த பொருட்களாக வும், அலுமினியப் பொருட்களாகவுமே இருக்கின்றன. அழகு வாய்ந்த லோட்டாக்களையும், குத்துவிளக்கு களையும், தட்டங்களையும் இப்போது நூதனப் பொருட் களாக மேசைகளில் வைக்கப்பழகிக்கொண்டோம். லோட்டாக்களினிடத்தை மலிந்த பீங்கான் பாத்திரங் கள் எடுத்துக்கொண்டன.

இது மாத்திரமா, பெண்களின் நகைகள், உடை கள், சேலைகளில் போடப்படும் கரைகள் இவைகள் யாவும் இந்திய கலை இலக்கணங்களுக்கு மாறு பட்டனவாகவேயிருக்கின்றன. கௌரவமும், அழ

(25 ம் பக்கம் பார்க்க)

**பாகிஸ்தான் அரசாங்கம் அன்பளிப்பாக வழங்கிய புனிதகேசதாதுவை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் திரு. டபிள்யு. தகநாயக்க ஏற்றுக்கொள்கிறூர்.**



# வன்னி

(பூர்வீக வரலாறு)

முதலியார் செ. இராசநாயகம் அவர்கள்

ஆங்கில அரசாட்சித் தொடக்கத்தில் வன்னி அரசாட்சி சிலகாலம் யாழ்ப்பாணக் கலக்டரின் கீழும் சிலகாலம் திருக்கோணமலைக் கலக்டரின் கீழும், இந்திய ஒளமில்தார்களால் நடத்தப்பட்டது. அவர்களில் ஒருவரான சுப்பபோக்கி முதலியார் என்பவர் சனங்களுக்கு இடுக்கண் செய்ததுமன்றிச் சிறு குற்றங்களுக்குக் கடுந்தண்டமும் விதித்து வந்தார். இந்திய உத்தியோகத்தர் திருப்பி அனுப்பப்பட்ட பின்பு பறங்கிகளே அவ்வுத்தியோகத்தில் இருந்தனர். கி.பி. 1801 தொடக்கம் 1805 வரை ஏபிரகாம் எவாட் பத்தோலமியுஸ் என்பவர் ஒளமில்தாராயிருந்தனர்.

கி.பி. 1802 ல் பூனேரவரி வன்னியில் அறவிடப்பட்டது. தங்க வெள்ளி நகைகள் அணியும் ஒவ்வொருவரும் வருடம் 2 இறைசால் வரி கொடுக்க வேண்டும். 1806 ல் பூனேரவரியால் 2959 இறைசால் கிடைத்தன. 1808 ல் கலக்டரின் கேள்விப்படி பூனேர வரி நீக்கப்பட்டது. அவ்வருடம் உப்பு வரியையும் நீக்கும்படி சனங்கள் கேட்டனர்.

கி.பி. 1803 ல் ஆங்கிலேயருக்குங் கண்டியரசனுக்கும் போர் நிகழ்ந்தபோது, நுவரகளாவிப் பண்டார வன்னியன் ஆங்கிலேயரை இலங்கையில் நின்றுந் தொலைத்துப் போடுவதாகச் சபதங் கூறி, கொட்டியாரத்தையும் முல்லைத் தீவையும் பிடித்தான். முல்லைத்தீவுக் கோட்டையிற் காவலாயிருந்த கப்பித்தானுஞ் சிப்பாயிகளும் மீன் வள்ளங்களிலேறி யாழ்ப்பாணத்திற்கு ஓடினார்கள். முல்லைத்தீவிலிருந்து வன்னியன் கைப்பட்டு இழுத்துச் சென்ற பீரங்கி பதுவிற் குளக்கரை வயலிற் புதைந்தது. வன்னியன் யானையிறவுப் பக்கத்து மூன்று கோட்டைகளையுந் தனதாக்கினான். இதையறிந்து, திருக்கோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் என்னும் மூவிடங்களிலுமிருந்து மூன்று சிப்பாயிப் பட்டாளங்கள் போய்க் கோட்டைகளைக் கைப்பற்றினதுமன்றிப், பண்டாரவன்னியனையும் அவனுடன் சென்ற வீரர்களையும் ஒக்டோபர் மாதம் 31 ந் திகதி முல்லைத் தீவுக்கடுத்த கச்சில மடுவிற் சந்தித்தபோது, வன்னியன் தப்பியோட, ஏனையோரில் 46 பேர் கைதிகளானதோடு அவனுடைய படை பண்டாரங்களும் ஆங்கிலேயர் கைப்பட்டன. அவனுக்குதவியாயிருந்த குமாரசிங்க முதலியார் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார். பெரிய குளத்தின் சொந்தக்காரனாகிய மாப்பாண முதலியார் என்னும் வன்னியனிலும் ஐயமிருந்தபடியால் அவனுடைய காணிகள் மாடாடுகளெல்லாம் அரசினர் பறித்தனர். அடுத்த வருடம் குளம் உடைந்து காணிகள் பாழாயின.

கர்ணல் பார்புற் யாழ்ப்பாணக் கலக்டராயிருந்த காலத்தில், யாழ்ப்பாணத்திலும் வன்னியிலுமிருந்து கண்டியரசன் ஊர்களுக்குப் போகும் பிரயாணிகளில் ஐயமுடையோரைத் தடுப்பதற்கு, ஊடுபோக்கு நிலையங்களாற் செல்லும் ஒவ்வொரு பிரயாணியும் ஒவ்வொரு பணம் "பிரயாணவரி" கொடுத்துச் சீட்டுப் பெற்றுப் போகவேண்டுமென்று நியமித்தனர். இவ்வரியினால் வருடம் 45 இறைசாலுக்கு மேற் கிடைக்கவில்லை. இவ்வரி 1816 ல் நீக்கப்பட்டது.

1806 ல் வன்னி யாழ்ப்பாணக் கலக்டரின் கீழிருந்தது. அவ்வருடத்தின் மீன்வரி அறவிடப்பட்டது.

1807 ல் முல்லைத்தீவு வவனியாப் பகுதிகளைக் கொண்ட வன்னியை மாகாணமாக்கி, முல்லைத்தீவிற் கச்சேரி வைத்து, கௌரவ ஜோர்ஜ் ரேணர் எனபவர் முதல் வருமான ஏசண்டராகவும், பின்பு 1808 ஜூலையில் கலக்டராகவும் நியமிக்கப்பட்டனர். அவருக்குக் கீழ், மாசம் 100 இறைசால் சம்பளத்தில் பூவரசங்குளத்தில் (பின்பு அன்னதேவன் மடுவில்) ஒரு பறங்கி றெசிடென்றும், 18 இறைசால் சம்பளத்தில் பூவரசங்குளத்திலும், வவனிய விளாங்குளத்திலும், பனங்காமத்திலும், அன்னதேவன் மடுவிலும் ஒவ்வொருவராக நான்கு பறங்கி அதிகாரங்களும், வன்னி பதினாறு பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பற்றுக்கு ஒவ்வொரு முதலியாரும், அவர்களுக்குக் கீழ் லாஸ்கொறீன் பட்டாளத் தலைவராகிய போர்மந்த முதலியாரென்றழைக்கப்பட்ட சில உத்தியோகத்தரும், மேயொருல், உடையார், விதானை, அடப்பனார், பட்டங்கட்டி முதலிய தலைமைக்காரருமிருந்தனர். அதிகாரங்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு அரசாட்சியாரால் காலங் குறித்துப் பணங் கொடுக்கப்பட்டது. பூவரசங்குளத்து

றெசிடென்ற் மாத்திரங் குறித்த கால வெல்லைக்குள் கட்டிமுடித்தபடியால், வீடு கட்டாதிருந்த மற்றவர் களிடமிருந்து பணம் அறவிடப்பட்டது.

1808 ம் வருடம் டிசெம்பர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் அதிகார உத்தியோகம் நீக்கப்பட்டது. அதன்பின் முதலிமாரே இக்கடமைகளைப் பார்த்து வந்தனர். அவர்களே வன்னியரென்று அழைக் கப்பட்டனர்.

1808 ல் அடுத்த வருட உப்பு வியாபாரக்குத்தகை 410 இறைசாலாகவும், சாராயக் குத்தகை 305 இறைசாலாகவும் விற்கப்பட்டன.

1809 ல் பண்டாரவன்னியன் மீண்டும் கலாம் விளைக்கத் தொடங்கினன். 1810 மே மாசத்தில் கிழக்கு மூலை தெற்கிலுள்ள கிராமமொன்றிற் புகுந்து வீடுகளைக் கொள்ளையடித்து, ஊரவர்களிற் சிலரையும் கொன்றனன். ஆகையால் வவனிய விளாங்குளத்திலும் வெடிவைத்த கல்லிலும் காப் பிரிகளைக்கொண்ட இரு சிறு படைகள் ஊர்க்காவ லுக்காக நியமிக்கப்பட்டன. இத்துடன் வன்னியர் கலகம் அமைதியுற்றுலும், நெடுங்காலமாக நடந்த கலகங்களினுலும், பல முறைகளிற் பெய்த பெரு மழையினுலும் உடைந்த குளங்களைத் திருத்தாத படியினுலும், காட்டுக் காய்ச்சலினுலும் நெல்வே ளாண்மை அழிந்து விட்டதால், நாட்டில் வறுமை யதிகரிக்கப்பட்டது. பண்டாரவன்னியனைச் சேர்ந்த வர்கள் கள்வராகவுங் கொள்ளைக்காரராகவுந் திரிந் தனர். அவர்கள் கிராமங்களிலுஞ் சிற்றூர்களிலும் நுழைந்து ஆடுமாடுகளைக் கவர்ந்தும், அகப்படும் பொருள்களைக் கொள்ளையடித்தும், பெண்களையும் பிள்ளைகளையும் பிடித்துத் தூரதேசங்களுக்குக் கொண்டு போய் அடிமைகளாக விற்றும், பற்பல நிட்டூரங்களைச் செய்து வந்தனர். அநேக கிராமங் கள் இதனுற் குடியற்றழிந்தன. நாடுகள் யாவுங் காடுகளாகி யானைகளுந் துஷ்ட மிருகங்களும் மிகுந் துறைதற்கிடமாயின.

குடிசனங்கள் மிகவும் வறுமைப்பட்டிருந்தபடியா லும், யாழ்ப்பாணத்திலிருந்து சனங்கள் குடி யேறுவதற்காகவும், ரேணர் என்னும் கலக்டர் பாக்கு கோப்பி, மிளகு, எள்ளு, பருத்தி, மெழுகு, தேங் காய், கொப்பரு, தேங்காய் எண்ணெய் முதலிய சாமான்களுக்கு எவ்வித வரியும் இருக்கக்கூடா தென்றும், தபால் வரியையும், காணி வழக்கு முத்திரை வரியையும் நீக்கி விடவேண்டுமென்றும், நீதிபதியுங் கோட்டுத்தியோகத்தரும் சுற்றுப் பிர யாணஞ் செய்யுஞ் செலவுக்காக மாத்திரம் ஒவ் வொரு சிவில் வழக்குக்கும் ஒவ்வொரு பணம் அறவிடப்படவேண்டுமென்றும், விண்ணப்பங்கள் தமிழில் எழுதவேண்டுமென்றும், 5 இறைசாலுக்குக் குறைந்த சிவில் வழக்குக்களும், ஆறு பிரம்படி தீர்க்கக்கூடிய குற்றங்களும் அதிகாரங்களால் விளங் கப்பட வேண்டுமென்றும் அரசினர்க்கு எடுத்து விளக்கி அனேக இடுக்கண்களைத் தீர்த்து வைத்தனர்.

வேளாண்மையை விருத்தி செய்வதற்குச் சகாய மாகச் சனங்களுக்கு விதை நெல்லு வாங்கவும், குளங்களைத் திருத்தவும் அரசாட்சியாரால் முற்பணம் கொடுக்கும்படி செய்வித்தனர். உடைந்திருந்த பல சிறு குளங்களைத்திருத்துவதற்கு முயற்சித்தனர். அநேகருக்குப் பல காரணங்களால் வேளாண்மை பலிதப்படாததால், வாங்கிய பணத்தையேனும் அதன் வட்டியையேனும் அவர்களால் கொடுக்க முடியவில்லை. அதனுல் அவர்களிடம் வட்டி அறவிடக்கூடாதென்றுஞ் சிலரிடம் முதலும் அறவிடக்கூடாதென்றும் நயந்து கேட்டு அரசாட் சியாரிடம் உத்தரவு பெற்றனர். அவர் நாடுசுற்றி வருங் காலத்தில் சிவில் வழக்குக்களை விளக்கி நடுச்செய்து வந்தனர். அதிகாரங்கள் நீக்கப்பட்டபின் விடத்தற்றீவில் ஒரு குற்ற விசாரணை நீதிபதியை நியமிக்கும்படி செய்தனர். இவரே அவ்விடத்துக்கு உதவிக் கலக்டராகவும் இருந்து வந்தனர்.

1810 ல் பெருங் களிப்பற்றும் விடத்தற்றீவும் மன்னுரிலிருந்து பிரிக்கப்பட்டு வன்னியுடன் சேர்க்கப் பட்டன.

1811 ல் கடைவரியும், எல்லைப்புற வரியும், ஆடம்பரச் சடங்குவரியும், யானை பிடித்து விற்கும் உத்தரவுச் சீட்டு வரியும், 1812 ல் சாயவேர் வரியும் நியமிக்கப்பட்டன.

கடைவரி தானியங்களுக்கு 2 சத வீதமாகவும், சில்லறையாக, விற்கும் பிற சாமான்களுக்கு 3 சத வீதமாகவும் அறவிடப்பட்டது. இவ்வரி 1813 ல் நீக்கப்பட்டது. ஒரு மாகாணத்திலிருந்து மறு மாகாணத்திற்கு அல்லது கண்டியரசன் தேசங்களுக் குக் கொண்டு போகும் சாமான்களுக்கு எல்லைப்புற வரியாக 10 சத வீதம் அறவிட்டு, 1812 ல் 5 சத வீதமாக்கப்பட்டது. மேய்ச்சலுக்குக் கொண்டு போகும் மாடுகள் ஒவ்வொன்றுக்கும் 2 துட்டு வரி. வன்னியில் 18 எல்லைப்புற வரிநிலையங்கள் இருந்தன. ஒன்றில் வரி கொடுத்துச் சீட்டுப் பெற்றுல் மற்ற நிலையங்களில் வரியில்லை.

வன்னிச் சாயவேர் விலையிற் குறைவானபடியா லும், குத்துவோர் அங்கில்லாதபடியாலும் சாயவேர் வரி அறவிடப்படவில்லை.

ஊழியம் பணவரியாக வன்னியில் அறவிடப் படவில்லை. ஊழியமாகவே செய்விக்கப்பட்டது.

1811 ம் வருடம் மார்ச்சு மாசத்தில் கலக்டர் ரேணர் நோயாளியாய்ப் போனபடியால் யாழ்ப்பா ணத்திற்றனே வசித்துத்தங்கடமைகளைப் பார்க்கும் படி இடங்கொடுக்கப்பட்டனர். அங்கே 1813 ம் வருடம் ஏப்பிறில் மாசத்தில் இறந்தனர். அவ்வருடம் ஜனவரி மாசத்தில் எஜீக்கியல் டேவிட் வோயிற் என்பவர் வன்னிக்கலக்டரானுர். வோயிற் கீழ் உத்தியோகத்தருடன் சச்சரவு செய்யுங் குணமுடையவராயிருந்ததுமன்றி, அவர்களிற் பலருக்கு விரோதமாக அறிக்கைசெய்தும் மன்னூர்க் கலக்டருடன் வாது செய்தும் இழுக்குற்றனர்.

1815 ம் வருடம் மே மாசத்தில் ஜோன் கோடன் போர்ப்ஸ் என்பவர் கலக்டராயினர். அவ்வருடத் திலே பெருங்களிப்பற்று மன்னுருடன் சேர்க்கப் பட்டது. இவர் காலத்தில் வன்னிக்கும் யாழ்ப்பா ணத்திற் போலத்தோம்பு எழுத முயற்சிபண் ணினர். வழக்குக்களைப் பஞ்சாயத்தில் தீர்க்கவும் இந்துமத கலியாணங்களைப் பதிவு செய்யவும் வழிகள் எடுத்தனர். பலமுறை காய்ச்சல் நோயாற் பீடிக்கப்பட்டு 1817 ல் கொழும்புக்குப்போனவர் திரும்பி வரவில்லை.

1818-ம் வருடம் மே மாதம் முதலாந் திகதி அரசினர் வன்னி நாடு தனிக் கலக்டரின் கீழிருப் பதை யகற்றி அதனைச் சேர்ந்த கிழக்கு மூலை தெற்கு, நடுச் செட்டிக்குளம், சின்னச் செட்டிக் குளம், மேற்குமூலை, பனங்காமம் என்னும் ஐந்தினையும் மன்னுருடனும், துணுக்காய் கருநாவல் பற்று வடக்குந் தெற்கும், புதுக்குடியிருப்பு என நான்கினையும் யாழ்ப்பாணத்துடனும் எஞ்சிய எட்டினையும் திருக்கோணமலையுடனும் சேர்த்தனர்.

1833 ல் அரசினர் திருக்கோணமலைக்குச் சேர்ந்த எட்டுப்பற்றுக்களையும் பிரித்து உடையாவூரையுங் கிழக்கு மூலை வடக்கையும் மன்னுருடன் சேர்த்து, மிகுதியான பற்றுக்கள் ஆறையும் யாழ்ப்பாணத் திற்குச்சேர்ந்திருந்த புதுக்குடியிருப்பையும் வன்னிப் பெரும்பகுதி ஆக்கி, வடமாகாணத்தின் ஒரு பிரிவாக வைத்து யாழ்ப்பாண ஏசண்டராகிய டயிக் அவர்களின் ஆளுகையில் விட்டனர். எட்மன்ட் வூட் என்பவரை முல்லைத் தீவுப்பகுதிக்கு நீதவானுக நியமித்தனர்.

1845 ம் வருடம் ஜனவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் குற்றவிசாரணைக் கோடுகளை மாற்றி டிஸ்திறிக் கோடு, றிக்குவெஸ்றகோடு, பொலிஸ் கோடு என்னுங் கோடுகளாக நியமித்தபோது, முல்லைத்தீவு டிஸ்திறிக் நீதவானுகவிருந்த, ஹென்றி போல் என்பவரை வன்னிப்பகுதி உதவி ஏசண்டராகவும், றிக்குவெஸ்ற் கோடு, பொலிஸ் கோடு நீதிபதியாகவும் நியமனஞ் செய்தனர்.

1848 ல் வன்னிக் குளங்களுக்கருகே இந்தியாவி லிருந்து குடிசனங்களை வருவித்துக் குடியேற்ற வேண்டுமென்றும் அதற்கு வேண்டிய வசதிகள் செய்யவேண்டுமென்றும் டயிக் ஏசண்டர் கேட்டும், அரசாட்சியார் அதைப்பற்றிய பிரயத்தனங்கள் எதுவும் செய்யவில்லை.

1849 ல் நியமிக்கப்பட்ட பகிரங்க வீதி வரி (இவ்வரியே தலைவரி யெனப்பட்டது) வன்னிக்கும் மன்னுருக்கும் 1 சிலின் 6 பென்சாக விதித்து, 1871-ல் செய்த பிரசித்தத்திஞல் ரூபா. 1-25 ஆக்கப்பட்டது.

1854 ம் வருடம் நவெம்பர் மாதம் 16 ந் திகதி தொடக்கம் 30 ந் திகதி வரை, பின் ஸேர் பட்டம் பெற்றுப் பிரசித்தியடைந்த கொழும்பு முத்துக்குமா ரசுவாமியவர்கள் முல்லைத்தீவில் உதவி ஏசண்டராக விருந்தனர்.

பற்றுக்களுங் கிராமங்களும் முறைக்கு முறை ஒன்று மற்றென்றுன பகுதிகளாகவே மாறி மாறிக் கொண்டிருந்தன. 1867 ல் கிழக்குமூலை வடக்கும் உடையாவூரும் வன்னியுடனும், துணுக்காய் மன்னுருடனும் சேர்க்கப்பட்டன. 1880 ல் துணுக்காய் வன்னியுடனும் பின்பு யாழ்ப்பாணத்துடனும் சேர்க்கப்பட்டது.

1876 ல் வன்னி இரண்டு பெரும்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முல்லைத்தீவுக்கு ஒரு உதவி ஏசண்டரும், வவனியாவுக்கு வேறெருவரும் நியமிக்கப்பட்டனர். ஆனுல், 1883 ம் வருடம் ஏப்பிறில் மாதம் 1 ந் திகதி அவையிரண்டும் திரும்பவும் ஒன்றுக்கப்பட்டன. அதற்கு முன் இரண்டு வருடங்களாக முல்லைத்தீவு உதவி ஏசண்டரே வவனியாவையும் பார்த்து வந்தனர்.

கிழக்குக் கரையில் சுண்டிக்குளம், மாத்தலான், செம்மலை, அளும்பில் என்னுமிடங்களில் தன் படுவன் உப்புப்பட்டு வந்தது. யாழ்ப்பாணத்தில்

அவ்வாறுன உப்புச் சுருங்கிய செலவிற் சேமித்துக் கொள்ள முடிந்ததால், 1866–க்குப்பின் வன்னியிற் பட்டு வந்த உப்பு அழிக்கப்பட்டது.

வாயிதா, காலத்துக்குக் காலம் வெவ்வேறு முறையாய் அறவிடப்பட்டது. ஒவ்வொரு காணி வாயிதாவையும் தனித்தனியாய் விற்றும், பின்பு கிராமங்களாகவும் தனிப்பட்ட வெளியிடங்களாகவும் விற்கப்பட்டது. மதிப்புக்குமேல் வரத்தக்க காணிக்கா ரனிடம் குத்தகைவிற்காமல் வரி ஏற்கப்பட்டது. இவ்விதமே குடிசனங்களிலனேகர் வரி கொடுத்தனர். காலஞ் செல்லச் செல்ல நெல் வாயிதாவை விட்டு ஒவ்வொரு பற்றும் பணவரியாக மாற்றப்பட்டது. ஆனுல் சில பற்றுக்கள் பணவரிக் குடன்படாது வாயிதாவையே செலுத்தி வந்தன. நெல் வாயிதா வருவாயில் ரேணர் காலத்தில் 2 சத வீதம் கலக்டருக்கு கொடுக்கப்பட்டது. பின்பு வவனியாப் பகுதி முதலிமார்களுக்கு 10 சத வீதமும் உடையா மாருக்கு 5 சத வீதமும் முல்லைத்தீவுப் பகுதி முதலி உடையார்மார் இருவருக்கும் 5 சத வீதமுங் கொடுக் கப்பட்டது. சிறு தானிய வரி 1890 டிசெம்பரிலும், நெல்வாயிதா 1892 முடிவிலும் நீக்கப்பட்டன. இதில் விசேடமாக முயற்சியெடுத்து அனுகூலமடை யச் செய்தவர் ஸேர் பொன். இராமநாதன் அவர்க ளேயாவர்.

மறு வரிகள் யாழ்ப்பாணத்திற் போலவே அறவிடப்பட்டன. இப்போது வன்னி அரசிறை வருவாய் பிரதானமாகக் கள்ளுச் சாராயக் குத்தகை யினுலும் முடிக்குரிய காணி விற்பனவினுலும், முத்திரை விற்பனவினுலுமே கிடைக்கின்றது. வவனியாச் சாராயக் குத்தகை 1887 ல் 424 ரூபாவா கவும், 1890 ல் 2,088 ரூபாவாகவும் விற்கப்பட்டது. முல்லைத்தீவுக் குத்தகை ரூபா 500–க்கு மேற் போகவில்லை. முத்திரையினுல் வருடாவருடம்

இரண்டாவது உலக யுத்தத்தின் பயனுக, நிராதரவான நிலையில் இருக்கும் 3 கோடி அகதிகள்பற்றிப்பேசுவதற்காக இலங்கை வந்துள்ள இளவரசர் சத்ருதீன் கான் அவர்கள் நிதிமந்திரி ஜனுப் எம். எம். முஸ்தாபா அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறுர்.



வவனியாவில் 1,500 ரூபாவும் முல்லைத்தீவில் 2,000 ரூபாவும் கிடைத்தன.

களவுப் பொருள் வியாபாரத்தைத் தொலைப்பதற்கு, 1879-ம் வருடத்தில், முல்லைத்தீவு துறைமுகமாக்கப்பட்டது. இத்துறைமுகத்தில் ஏற்றுமதி செய்யும் பொருள்களில் நாலில் மூன்று பங்காகிய கருவாடு வருடா வருடம் ஒரு லட்சம் ரூபா பெறுமதியாகும். இத்தொகையில் ஒரு பணந்தானும் ஊரவர்களுக்குக் கிடைப்பதில்லை. மீன் பிடித்துக்கருவாடாக உலர்த்துஞ் சிங்களர் அச்சரக்கைத் தங்கள் ஊர்களுக்குக்கொண்டு போவதால், அறவிடுந் தீர்வையாலும், உப்பு விற்பனையாலும் அரசாட்சியாருக்கே இலாபமாயிற்று.

வடமத்திய வீதியிலே கள்வரின் கொடுமை நெடுங்காலமாகக் குறையவேயில்லை. இக்கள்வர் பல முறைகளிலும் யாழ்ப்பாணக் கிராமங்களிலும் நுழைந்து கொள்ளைகொண்டு மீளுவதுண்டு. சனங்களுக்குப் போக்குத்தடை செய்யும் யானைகளை ஒழிப்பதற்கு அரசாட்சியாரால் பல உபாயங்கள் கையாளப்பட்டன. ஆனால், வன்னியைச் சனசஞ்சாரமற்ற காடாக்குங் காட்டுக்காய்ச்சலைத் தொலைப்பதற்கோ எவ்வித உபாயங்களும் கையாளப்பட்டதாகத்தெரியவில்லை.

வன்னித் தலைவர் மரபைச் சேர்ந்த பொன்னார் வன்னிச்சியென்னும் பெண் 1848 ம் ஆண்டில் வண்ணார்பண்ணையில் தன்புராதனமான இல்லமொன்றில் வசித்து வந்தனள். மேலே கூறிய பிரசித்தியடைந்த வன்னியர் மரபினராகிய பல்லோர் வடமருட்சி, தென்மருட்சி, வலிகாமம் முதலிய பகுதிகளில் இன்றும் வசிக்கின்றார்கள்.

1887 லும் 1888 லும் பருத்தி விளைவிப்பதற்கு அரசாட்சியாரின் கேள்விப்படி துவைனம் ஏசண்டர் எவ்வளவோ முயற்சி யெடுத்தும் பஞ்சுவிலை குறைந்தபடியால் பருத்தி வேளாண்மை தலையெடுக்கவில்லை.

1892 ல் வவனியாவில் ஒரு விவசாயப் பயிற்சித் தோட்டம் வைத்து நடத்துவதற்கு ரூபா 1,000 கொடுத்து அவ்வாறே அடுத்த வருடமும் கொடுப்பதாக அரசாட்சியார் சம்மதித்தனர்.

1898 ல் பயிற்சித் தோட்டத்தில் பயனில்லையெனக் கண்டுகைவிட்டு வவனியாவிலும், கனகராயன் குளத்திலும், ரூபா 500 வீதஞ் செலவழித்து இரண்டு பழவகைத் தோட்டம் வைத்து நடத்துதல் பயனுடைத்தாகுமென்று ஏசண்டர் ஐவேஷ் அவர்கள் அரசாட்சியாரைக் கேட்டனர்.

## கலையும் பெண்களும்..........

(20 ம் பக்கத் தொடர்ச்சி)

கும் சிறிதளவேனுமில்லாத கண்ணுடி வளையல்களின் விகாரத்தை என் சொல்வது! அழகும் அசைப்பும் இல்லாது காதுகளில் தொங்கும் தூக்கணங்களை என்சொல்வது! எமது நாட்டுப் பெண்மக்கள் தமிழ்ப் பண்பும், கலைவனப்பும் நிறைந்த பொருட்களை உயோகிக்கத் தொடங்கினாலன்றி, எம் நாட்டில் தமிழ்க்கலை வளர்ச்சிபெறமுடியாது. தமிழ்க் கலைப் பொருட்கள் விருத்தியடைய வேண்டுமாயின், தமிழ்ப் பெண்கள் அப்பொருட்களை உபயோகிக்க முன்வரவேண்டும். பண்டைத்தமிழ் நகைகளைக் காலத்திற்கேற்ற விதத்தில் அமைத்து அவற்றை அணிதல் வேண்டும்.

சினிமா நாடக நட்சத்திரங்களின் உடைகளையும் நகைகளையும் பார்த்துப் பின்பற்றும் வழக்கம் ஒழிய வேண்டும். தமிழ் ஓவியங்களிலும், இலக்கியங்களிலும், சிற்பங்களிலும் காணப்படும் கலைப்பொருட்களின் சிறந்த அமைப்புகளைப் பின்பற்ற முன்வருவதல் வேண்டும். குமாரி கமலா ராஜகுமாரி, லலிதா-பத்மினி போன்ற நாடக ரத்தினங்களின் சரித்திர வரலாற்றைப் படித்துக் காலங்கழியாது, தலைசிறந்த தியாகிகளாகவும், தலைவிகளாகவும் விளங்கிப் புதிய பாரதத்தை அமைத்த ஸ்ரீசாரதா தேவி, ஸ்ரீ கஸ்தூரிபாய் காந்தி, சரோஜினி தேவி, கமலாநேரு, விஜயலட்சுமி பண்டிற் முதலிய உத்தமிகளின் சரித்திர வரலாற்றைப் படித்து இன்புறுதல் வேண்டும். பூர்வீக இந்தியாவில் பெண்கள் யாபேரும் கலைவிளக்குகளாக இல்லங்களில் விளங்கினார்களென இலக்கியங்களிலே படிக்கிறோம். சீதையையும் தமயந்தியையும், சாவித்திரியையும், சகுந்தலையையும், கண்ணகியையும், மணிமேகலையையும், மங்கையர்க்கரசியாரையும், ஆண்டாளையும் புலவர்கள் அவ்விதமே உருவகப்படுத்தி எமக்களித்துள்ளார்கள். அவர்களிடத்தே காணப்பட்ட சீரும், சிறப்பும், கலைவிருப்பும், கல்வித்திறனும், தியாகமும், ஒழுக்கமும், அன்பும் தம்மிடத்தே பொருந்திய உத்தமிகளாக இக்காலத் தமிழ்மகளிர் யாபேரும் வாழ்வாராயின் தமிழ்க்கலையும், சமயமும், நாடும் இன்புற்றுவாழும் என்பது சத்தியம். "இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை" என்றார் ஔவையார். தமிழ்ப் பண்பும், கலைப்பண்பும் நிறைந்த பெண்கள் நாட்டிலிருந்தால் தமிழ் நாட்டில் எல்லா வளமும் பெருகிச் சிறக்கும் என்பதை நாம் சொல்லவும் வேண்டுமா?

(தமிழ் மகள்)

# கண்டி- நடனம்

(திரு கே. கணேஷ்)

கண்டிய நடனம் என்ற இலங்கையின் மேலநாட்டு நடனம், பரத நாட்டியம், கதகளி, மணிபுரி முதலிய நடனங்களைப் போல இன்று உலகப் பிரசித்தி அடைந்துவிட்டது. உலகப் புகழ் பெற்ற நாட்டியக்காரர்களான உதயசங்கர், ராம் கோபால் போன்றவர்களும் கண்டிய நடனத்தைத் தங்களது நடன வரிசையில் ஒன்றுகச் சேர்த்துக் கொண்டுவிட்டார்கள். நமது சொந்தக் கலாசாரங் களைக்கூட மேல்நாட்டவர்கள் போற்றிப் புகழ்ந்த பின்னரே அவற்றில் நன்மை தேடித் திரியும் நம் கீழ்நாட்டவர்களும் கண்டிய நடனத்தின் சிறப்பியல்புகளை ஆராயத் தொடங்கிவிட்டார்கள். இலங்கைத்தீவின் பல பள்ளிக்கூடங்களில் இந்நாட்டியப் பயிற்சியும் ஒரு பாடமாக இடம் பெற்றுள்ளது.

தமிழ்க் கலையான பரத நாட்டியத்தின் வளர்ச்சியும் கண்டிய நடனத்தின் வளர்ச்சியும் ஒருவகையில் ஒத்திருக்கின்றன. பரத நாட்டியம் அனைவரும் கற்ற சாத்திரமாக இருந்து பின்னர் ஒரு குலத்தவரே அதனைப் பேணிக்காக்க அவர்களை “இழிகுலத்” தவராக மதித்த காலம் போய் இன்று பெண்பார்க்கப் போகும் ஒவ்வொரு இளைஞனும் பெண்ணிடம் சங்கீதம், தையல் பயிற்சிகள் இருப்பதுடன் பரத நாட்டியத்திலும் பயிற்சி உண்டா? என்று அறிந்து தேர்ந்தெடுக்கும் நிலைமைக்கு வந்துவிட்டது. உயர்ந்த குலத்தவர்கள் என்று கருதப்பட்ட அனைவரும் அதனைப் போற்றி வளர்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

இலங்கையின் மலைப் பிரதேசமான மேற்பகுதிகளிலேயே இந்நடனம் இன்று நிலைபெற்றுள்ளது. கடல் சார்ந்த கீழ்நாடுகளில் அவை கிடையா. போர்த்துக்கீசியர் டச்சுக்காரர் இவர்களின் நாகரிகத்தினை ஏற்றுத் தனதாகக்கொண்டு அப்பகுதியினர் ஐரோப்பிய கலாசாரத்தை மட்டும் ஏற்று சுதேசக்கலைகளை மறந்ததன் காரணத்தால் இன்று கண்டிய நடனம், சிற்பத் தொழில் முதலியவை அப்பகுதியில் இல்லாமற் போய்விட்டது என்று ஒருசாரார் கூறுகின்றனர். வெளிநாட்டவர்களின் வாசனை மலைப் பிரதேசங்களுக்கு பிரிட்டிஷார் காலத்தில்—சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னரே வீசியதால் நாட்டின் கலைப் பண்புகள் அழிக்கப்படாது நிலைபெற்றுள்ளன என்றும் அவர்களே கூறுகின்றனர். பிறநாட்டுக் கலைகளும் ஆட்சியும் நாட்டில் இடம் பெற்றுவிட்டாலும் எங்காவது ஒரு பகுதியிலே உள்ளூர்க் கலைகள் வளர்ந்துகொண்டுதான் வருகின்றன. எனவே கண்டிய நடனம் மலைப் பகுதியான மேலநாட்டில் மட்டும் நிலைபெற்றதற்குக் காரணம் அது பிற்காலத்தில் இந்தியாவினின்று வந்ததன் காரணமாகவே ஆகும்.

தமிழ் நாட்டின் மூவேந்தர்களின் படையெடுப்பை இலங்கை கண்டது. மேற்பகுதியில்தான் அவர்கள் ஆட்சியும் அதன் காரணமாகக் கலைகளும் பரவின. இலங்கையின் கடைசி மன்னன் ஒரு நாயக்கனுகும். அக்காலத்தில் அரசகுடும்பத்தினரும், அவர்களது பரிவாரங்களும் சேர, சோழ, பாண்டிய நாடுகளிலே பெண் கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டதை சரித்திரம் காட்டுகிறது. இத்தகைய குடும்ப சம்பந்தத்தின் காரணமாகவும் தமிழ்நாடோடு செய்து வந்த வாணிபத் தொடர்பாலும் அந்நாட்டின் கலைகள் கண்டிப் பகுதிகளிலே பரவத் தொடங்கின. இன்றுவரை சமூகப் பழக்கவழக்கங்கள் முதல், உடுத்தும் உடைவரையும் பண்டைய தமிழ்நாட்டினதை ஒத்திருப்பதற்கு அவையே காரணமாகும்.

ஒவ்வொரு நாட்டிலும் அதன் பண்பையும் சூழ்நிலையையும் பொறுத்து கலைகள் உண்டாகின்றன. நாளடைவில் பிற நாகரிகங்கள் வந்து சேரவும் அதன் அம்சங்கள் சிலவோ அன்றிப் பலவோ சேர்கின்றன. உலகத்தின் வளர்ச்சியுற்ற எந்தக் கலையும் புற அம்சங்களின் சேர்க்கையின்றி வளர்ச்சி அடையவில்லை. கண்டிய நடனமும் அதேபோல் வழிவழியாக இருந்த உள்ளூர் நாட்டிய சங்கீத முறைகளோடு கேரளம், தமிழ் நாடு ஆகியவற்றின் கலைப்பண்புகளும் கலந்துவிட்டன. இனிக் குறிக்கப்படும் நாட்டிய முறைகளும், அவற்றின் பெயர்களும் இதற்குச் சான்ருகும். நடன முறையும், உடை அலங்காரமும் கேரள நாட்டின் கதகளியுடன் ஒத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. நாட்டியக் காரர்களிடையே வழங்கிவரும் கர்ணபரம் பரைக் கதையும் இதனை வலியுறுத்துகிறது.

இலங்கையை ஆண்டுவந்த சிங்கள அரசர்களில் ஒருவனின் உடல்நலம் குன்றியதால் நாட்டிலுள்ள தேர்ந்த மருத்துவர்களையெல்லாம் கொண்டு வைத்தியம் பார்த்தும் குணப்படாததால் பாண்டிய அரசனுக்கு தூது அனுப்பி கேரள நாட்டிலிருந்து

நான்கு அந்தணர்களை அழைப்பித்தான். அவர்கள் நான்கு வேதங்களான இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகியவற்றின் பெயர்களைப் பூண்டவர்கள். அவர்கள் கைதேர்ந்த நாட்டியக்காரர்கள். கோசம்பி, கந்தர்வர் முதலிய தேவர்களின் நடனத்தில் தேர்ந்தவர்கள். அவர்கள் அரசனின் முன்னர் புலி, மான், மலையரசனின் முகம் ஆகியவற்றைப் போன்ற முகமூடியை மூவர் அணிய மற்றவர் கையில் மத்தளத்துடன் தாளம்போட ஆடி மன்னனை மகிழ்வித்து அவன் நோயைப்போக்கினர். அதுமுதல் நடனம் இலங்கையில் நிலைபெற்றது என்பது ஒரு கர்ணபரம்பரைக் கதை.

கடல்சூழ் இலங்கையில் கண்ணகி வழிபாடான பத்தினி வழிபாட்டை உண்டாக்கிய கயவாகு மன்னன் நாவலந் தீவிற்கு (இந்தியாவிற்கு) சிலரை அனுப்பி நடனம் பழக்குவித்தானெனவும் ஒரு கதை உண்டு.

கண்டிய நடனம் ராஜ சபைகளிலும், பிரபுக்கள் முன்னரும் ஆடப்பட்டு அவர்களின் ஆதரவைப் பெற்றுவந்தது. இவர்களைத்தவிர கோயில்களின் மூலமும் இக்கலை வளர்க்கப்பட்டது. இவற்றிற்கென நடனமாடுபவருக்கும் அவர் குடும்பத்தர்களுக்கும் மானியம் அளிக்கப்பட்டது. பிற்காலத்தில் அரசு முறையும் பிரபுத்துவ முறையும் அழிந்ததும் இக்கலைகள் கோயில்களில் மட்டுமே வளர்க்கப்பட்டு வந்தது. மனிதன் தனது கற்பனையாலும் முயற்சியாலும் உருவான சிற்பம், ஓவியம், நடனம், இலக்கியம் அனைத்தையும் கடவுளுக்கே அர்ப்பணம் செய்துவந்தான். இதன் காரணமாகவே சில கலைகளாவது எஞ்சியுள்ளன. இம்முறையிலே கண்டிய நடனமும் பௌத்தகோவில்களில் அமாவாசை, பௌர்ணமி, அட்டமி, நவமி போன்ற முக்கிய நாட்களிலும் "பெரஹர" என்ற திருவிழாக் காலத்திலும் ஆடப்பட்டுவந்தது. செய்தொழில் வேற்றுமையால் உற்பத்தியான சாதி முறையின் காரணமாக உழைப்பாளிகள் கீழ்க்குலத்தவர்களாகக் கருதப்பட்டனர். அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் நடனமாடிய இக்கலைஞர்களும் நாளடைவில் கீழ்க்குலத்தவர்களாகவே மதிக்கப்பட்டு வந்தனர்.

பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தினர் தங்கள் ஆளுகைக்குக் கீழுள்ள நாடுகளில் சென்றவுடன் அந்தந்த நாட்டின் கலாசாரங்களிலோ நாகரிகத்திலோ அக்கறைகொள்வதாகக் காட்டிக்கொள்வார்கள். ஒருவர் எருது வளர்ப்பிலே அக்கறை காட்டுவார். மற்றவர் நாட்டின் இலக்கியத்திலே சிரத்தை கொள்வார். வேறொருவர் அந்நாட்டின் உடைகளை உடுத்தி அந்நாட்டு மொழியிலேயே ஓரிரு வார்த்தைகள் பேசி மக்களின் நன்மதிப்பைப் பெற முயல்வார். தனது தொழிற்காலம் முடிந்து சொந்த நாடு திரும்பியதும் தாங்கள் ஆண்ட நாட்டின் ஞாபகச் சின்னமாக ஏதாவது கொண்டு போவார்கள். அல்லது அங்கு போய் அவற்றைப்பற்றிப் பேசுவார்கள். இந்த வகையில் எண்பது ஆண்டுகளுக்கு முன்னரே கண்டிய நடனம் மேல்நாடுகளுக்குச் செல்லத் தொடங்கியது. நன்மை தீமைகளை நடுநிலைமைகொண்டு ஆராய்ந்து பார்க்கும் தன்மையுடைய அந்நாட்டவர்களும் நடனத்தின் சிறப்பைக் கண்டு போற்றினர். இங்ஙனம் முதன் முதலாக ஜெர்மனி போன்ற நாடுகளுக்குத் தற்போது புகழ்பெற்றுள்ள உக்குவாவின் தந்தையாகிய ஜாயனு என்பவர் சென்று புகழும் பொருளும் ஈட்டிவந்தார். இதன் பின்னர் அவரின் உறவினர்களான குணேயா, சுரம்பாயதிஸ்ஸ முதலியவர்களும் இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி முதலிய நாடுகளுக்குச் சென்று ஆடிவந்திருக்கின்றனர். மேல்நாட்டவர்களின் புகழை கண்டிய நடனம் பெற்றதும் நம் நாட்டவர்களுக்கு கண்விழிப்பு ஏற்பட்டது. அதன் சிறப்புகளை ஒவ்வொருவரும் ஆராயத் தொடங்கினுர்கள். அரசாங்க வைபவங்களுக்கும், மற்றும் பவனிகளுக்கும் அமர்த்தத்தொடங்கினுர்கள். பிரசித்தி பெற்ற மேல் நாட்டுச் சினிமாப் படப்பிடிப்பாளர்களான ஜான்கிரியர்சன், பேசில்ரைட் முதலியவர்களும் இவற்றைப் படம்பிடித்து அதன் புகழை மேலும் பரப்பினர்கள். "டாக்குமெண்டரி" படம் என்னும் விமர்சனப்படமான "இலங்கைக் கீதம்" என்ற கவிதா உணர்ச்சிமிக்க படம் பலரின் மனதைக் கவர்ந்தது. வெளிநாட்டவர்களுக்குப் பெருமையுடன் எடுத்துக் காட்டக்கூடிய கலையென்ற முறையில் அரசாங்கத்தாரும் இதனைப் பள்ளிகளிலே பாடமாகவும் வைக்கத் தொடங்கினுர்கள். உயர் குடும்பத்தில் உள்ளவர்களும் நடனப் பயிற்சியில் ஈடுபட்டு இக்கலை இன்று உன்னத நிலையை அடைந்துள்ளது.

இக்கண்டிய நாட்டியத்தினதும், கண்டிய சங்கீதத்தின் மூலாதாரமும் தத, தித், தொத, தீ, நம என்ற ஐந்து மத்தள தாளங்களிலே அமைத்திருப்பதாக வராங்கெஸ்ஸ ரத்தினமாலா என்ற வடமொழி நூல் கூறுகிறது. இவற்றினின்றே 32 ராகங்களும், 64 கீதங்களும், 64 திஸ்டி, 5 லீலா, 32 தாளம், 18 வண்ணம் முதலியன தோன்றினவாம்.

கண்டிய நடனம், தற்போது **பந்தேரு, உடக்கி, வெஸ்** என்ற மூன்று வகை நடனங்கள்

நடைபெற்று வருகின்றன. இவற்றை கீழ்க்கண்ட பதினெட்டுவகை வண்ணங்களில் ஆடலாம். **யானை, குதிரை, முயல், மயில், அன்னம்** முதலியவற்றைப் போல் அபிநயம் பிடித்துக் காட்டுவதே இவ்வண்ணங்களாகும். **தௌக்கவண்ணம், நாகவண்ணம், கஜவண்ணம், ஹங்கவண்ணம், செவுலவண்ணம், உக்குஸவண்ணம், வைரொடிவண்ணம், ஹனுமா வண்ணம், நாயடிவண்ணம், மயூரடிவண்ணம், சிங்கஅடிவண்ணம், குதிரைஅடிவண்ணம், கிரள வண்ணம், அதத்ரவிவண்ணம், ஈரடிவண்ணம், சுரபதவண்ணம், கணபதிவண்ணம், உதர வண்ணம்** என்பவை இவையாகும். பந்தேரு என்ற சதங்கைகள் கொண்ட வளையலைக் கையிற் கொண்டு நாட்டியமாடுபவர்கள் தலையில் பாகைகட்டி இடையில் சிகப்போ, கறுப்போ அல்லது வெள்ளை நிறமோ கொண்ட வஸ்திரத்தைச் சுற்றி அணிந்து அதன்மேல் வெள்ளிக் கெடியாரச் சங்கிலியை ஒத்த நீண்ட சங்கிலியால் இறுக்கிச் சுற்றிக்கொள்கிறார்கள். நெஞ்சில் பாசிகளால் செவ்வந்திப் பூக்களைப் போலவும் சூரியன்கள் போலவும் பன்னிரண்டு சிறுவட்டங்களாலான பாசிப் பெருவட்டமொன்றை இழுத்து முதுகுப்புறத்தில் கட்டப்படுகின்றது. பல வண்ணங்களாலான பாசிகள் பார்வைக்கு வெகு ரம்மியமாக இருக்கும். காலிலே சிலம்பு ஒவ்வொன்றும் (சிங்களத்திலும், சிலம்பு என்று அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.) பந்தி வளையல்கள் கைக்கு ஆறு. இத்தகைய அலங்காரங்களுடன் எட்டுப்பேர் கொண்ட கோஷ்டி ஒன்று "பெர" என்ற மத்தளக்காரரின் வாசிப்புக்கு ஏற்றாற்போல் மேற்கூறிய பதினெட்டு வண்ணங்களையும் ஆடுகின்றனர்.

உடக்கி என்று கூறப்படும் உடுக்கு நடனமானது மேற்கூறிய உடையுடன் கையில் பந்தேருவளையத்திற்குப் பதிலாக உடுக்கைப் பிடித்து அடித்து அதன் இசையுடன் ஆடுவதாகும். இந்நடனத்திற்கு மத்தளம் தேவைப்படுவதில்லை.

வேஸ் என்ற வேஷ நடனமானது கண்டிய நடனத்திலே மிகச் சிறப்புடையதாகும். எட்டுக் கஜத்தாலான ஆறு துணிகளை இடையிலே பலவிதமாகச் சுற்றி இறுக்கி அதன்மேல் வெள்ளிக் குமிழ்கள் கொண்ட யானை முகபடாம் போன்றதொன்றை இருகால்களுக்கும் மத்தியில் கீழே தொங்கவிட்டு தலையில் முண்டாசனை என்ற பல உலோகங்களாலான கிரீடம் போன்றதொன்றை அணிந்து மேற்கண்ட நடனங்களில் குறிப்பிட்ட சிலம்பு, பந்திவளையல் அனைத்தையும் பூண்டு ஆடுவதுதான் இவ்வெஸ் நடனமாகும். இந்நடனத்திற்கு இரண்டு பேருக்கு ஒரு மத்தளம் வாசிப்பவன் தேவைப்படுகிறது.

இன்று மேலும் பலபிரிவுகளும் உபபிரிவுகளும் பிரிக்கப்பட்டு இந்நாட்டியம் முன்னேறி வருகிறது. கதக், கதகளி, மணிபுரி, பரதநாட்டியம் ஆகியவற்றின் அனுபவங்களிலிருந்தும் மேல்நாட்டு "பெலே" என்ற அபிநய நாடகத்தையும் அனுசரித்து கண்டிய நடன முறை நவீனமாக்கப்படுகிறது.

நாடெங்கும் நடனப் பயிற்சி விரவி இருந்தாலும் நாட்டியத்திற்கென இதுவரை பள்ளி இருக்கவில்லை. இக்குறையை கலை வள்ளலான ஹொரல்டு பீரிஸ் அவர்களும் இலங்கை உதவிப் பிஷப்பான லக்தாஸ் டிமெல் அவர்களும் போக்கிவிட்டனர். அவர்களது உதவியால் கண்டிய நடனமாடும் கந்தர்வகுலத்தோர் நிறைந்த அமுனுகம என்ற அழகிய கிராமத்திலே "மத்திய இலங்கை நிருத்திய கலாமண்டலம்" என்ற ஸ்தாபனம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 1949 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாந் திகதி இதனை இலங்கைக் கவர்னர் ஜெனரலான சோல்பரி பிரபு திறந்து வைத்தார். இந்தியாவில் எங்ஙனம் அல்மோராவும், ஷோரனூரை அடுத்த செறு துருத்தியும் நடனக் கலைக்குப் புகழ்பெற்றுள்ளதோ அதே போல கண்டியிலிருந்து ஐந்துமைல் தூரத்திலுள்ள அமுனுகம பிரசித்தி அடைந்து வருகின்றது. இதனை மேல்நாட்டில் புகழ்பெற்ற சுரம்பாவின் தம்பியும் முப்பது ஆண்டுகட்கு முன்னால் ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று ஆறு ஆண்டுகள் இருந்து ஆடிப்புகழ்பெற்ற குணமாலயத்திஸ்ஸ என்பவரின் புதல்வரும் குணயா, உக்குவா முதலியோரின் உறவினரும் புகழ்பெற்ற நாட்டியக்காரருமான ஜாயஞ என்ற இளைஞர் நடத்தி வருகிறார். அவரின் பெருமுயற்சியால் பெண்களும் பங்குபற்ற முனைந்துவிட்டனர். இதுவரை கண்டிய நடனம் ஆண்கள் மட்டுமே ஆடக்கூடிய தாண்டவநடனமாக இருந்தது. பெண்களும் பங்குபற்றக்கூடிய மற்றொரு முறையான லஸ்ய அம்சம் புனருத்தாரணம் செய்யப்பட்டு குணவதி, பிரேமா போன்ற பெண்மணிகள் உக்குஸவண்ணம் என்ற கழுகு நடனம் போன்றவற்றையும் வெகு அழகாக ஆடிவருகின்றனர். அரசாங்கத்தின் முயற்சியால் கண்டி நடனக்கலை பாடசாலைகளிலும் பயிற்றப்பட்டுவருகிறது. இதனால் சுதந்திர இலங்கையில் கண்டிநடனம் அதிக முன்னேற்றம் அடைந்து வருகின்றது. அதுபழையபடி உன்னததானத்தை வகிக்கும் என்பதில் ஐயமில்லை.

# மெய்ஞ்ஞானப் பெரியார்

(திரு. சு. பெரியதம்பி அவர்கள்)

அந்தக்கரண சுத்தியோடு இறைபணி நிற்றற் பெரு மைவாய்ந்த மெய்ஞ்ஞானப் பெரியார் யோகக்காட் சிக்கும் மேலதாய் நிகழும் அநுபூதிச் செல்வராத லின், இப்பெரியார் குணஞ் செயலொழுக்கங்களின் தாரதம் மியங்களை, மனமொழி மெய்களின் மாசு தீராதாராய்ப் பிரபஞ்சமும் அதன் சார்பான போக யோக்கியங்களுமே பொருளெனப் போற்றி இந்திரி யக் காட்சியும் அது துணையாக நிகழும் ஆராய்ச்சி அறிவுங்கொண்டே யெதனையும் அறியும் இயல்பின ராய் வாழ்ந்து நாத்திகம் பேசி இறுமாந்துலவும் நம்மனோர் அறியுந்தரத்தரல்லர். ஆயினும் சீவ காருண்ணிய நெறிநின்ற இப் பெரியார் தாம் பெற்ற வாழ்வைப் பிறர் பெறவில்லையே யென்றி ரங்கி மக்கட்கு மெய்ஞ்ஞான நெறிபோதித்து வற் புறுத்துவராதலின், இவர் உரையையும் இவர் வழி வந்த அறிவு நூலையும் கருவியாகக் கொண்டிப் பெரியார் நிலையையறிந்து கடைப்பிடித்து நல்வாழ் வெய்த முயனுதல் இவர் ஆணை வழிநிற்றலே யாகும். அறிவாற்றல்களால் நிரம்பிக்காலதேசங்க ளால் ஏகதேசப்படாத அறிவுடையரால் திரிகால உணர்ச்சி தொலைவினுணர்தல் முதலிய ஆபூர்வ ஆற்றல்களால் மேலும் மேலும் மேம்பாடுற்று விளங் கும் இப்பெரியாருரையும் அவர் வழி வந்த அறிவு நூலும் அறிவுடையா ரெவர்க்குமுடன்பாடே.

நித்தியாநித்திய வஸ்துவிவேகமும் அந்தக்கரண சுத்தியும் பெற்றதன் பயனுய்த் தலைக் கூடிய ஞான நிலையைப் பற்றிய உண்மைகள் சில முதற் கண் அறியத்தக்கன. இப்பிரபஞ்சம் நிலையில்லா தது. இதன் கண் நமக்கு இன்பமும் சுகமுமே இல்லை. ஒரு போது இன்பமும் சுகமும் இருப்பது போலத் தோன்றினும் துன்பத்தின் பாலனவாகவே முடியும். நாம் விரும்பித் தேடுவன பல இன்பந் தரும் போதும் துன்பத்தோடு கூடிவரும். சில இன்பமாய்த் தோன்றி யடுத்த நிமிஷம் துன்ப மாய்ப்பரிணமிக்கும்; பல தேடற்கண் இன்பமாகக் கருதப்பட்டுப் பெற்றபோது அநுபவத்திற் சுவை மிகக்குன்றிநிற்கும். இவை யெல்லாம் தேடற்கண் துன்பம்; காத்தற்கண் துன்பம்; பின்னிழத்தற் கண் துன்பம். நிலையில்லாத விவற்றைப் பெற்ற வழியிவை யழியுமோ என்றபயம், இவற்றிற்குக்கேடு செய்வார் மாட்டுக் கோபம் கேடு நீக்கிக் காத்தற்கண் கவலை, யிவற்றை யபகரித்து வாழ்வார் பிறர்மாட்ட முக்காறெனத் துன்பமூழம் பலதிறப்பட்டு வாழ்க்கை தீரா விடும்பைக்கு நிலைக்களமாம்.

பிரபஞ்சமும் பிரபஞ்ச வாழ்க்கையில் நாம் சுகம் தருவனவெனக் கருதும் பெண்டு பிள்ளை சுற்றம் யாக்கை செல்வம் ஆதியனவெல்லாம் துன்பமேயன்றி யின்பந்தரமாட்டா என்னு முணர்ச்சி யுறைப்பாய் நிகழ, தானல்லாத உடம்பு பொறிமுதலியவற்றைத் தானென்றும். தனவல்லாத மண் பொன் பெண் மக்கள் சுற்றமாதியனவற்றைத் தனவென்றுங் கொண்ட ஆசையபி மானங்குறையும். இவ்வாறு நிகழும் பிரபஞ்ச வைராக்கியம் உண்மைப் பொருள் நாட்டத்தோடு கூடிய அந்தக்கரண சுத்தியைத் தரும். தானல்லாததைத் தானெனக் கருதும் அகங்காரமும் தனதல்லாததைத் தனதெனக் கரு தும் மமகாரமும் நீக்கிப் பிரபஞ்சத்தில் உவர்ப்புக் கொண்ட வழியுண்மைப் பொருள் நாட்டம் நிகழ் தல் இயல்பே. பொருளல்லாதனவற்றை வெறுத் துத்தள்ளி மெய்ப் பொருள் நாட்டத்தில் அவா மிக்கு நிகழும் பரிபக்குவர்களுக்கு மெய்ப்பொரு ளுணர்ச்சி தோன்றுமென் பரறிந்தோர்.

பிரபஞ்சத்துக்குள்ளும் புறம்பும் வியாபித்துத் தனக்கோர் ஆதாரமின்றித் தானே யெப்பொருட்கு மாதாரமாய் உயிருள்ளனவுமில்லனவுமான எல் லாப் பொருள்களும் தந்நிலையில் நின்று தத்தம் தொழில் செய்தற்கோர் பேருபகாரியாய் நித்திய நிர்மலசித்துப் பொருளாய் கருணை வடிவினதாய், உயிர்களுக் கனுக்கிரகம் செய்யும் வகையிற் பேரின்பப் பேறூற்றெனக் கருதத்தக்கதாயுள்ள சிவபரம் பொருளே மெய்ப் பொருளென்றும், பிரபஞ்சவை ராக்கியமும் அந்தக்கரணசுத்தியும் அடைந்ததன் பயனுய், மெய்ப் பொருள் உணர்ச்சிபெற்ருேர். இம் மெய்ப் பொருளின் உபகாரத்தால், ஆற்றலறிவுக ளால் மேன் மேலுயர்ந்து பேரானந்தப் பெரு வாழ்வெய்துவரென்றுங் கூறுவர்.

"அந்தக்கரண சுத்தியேயாவ தவாவற் றிடுதலே"
என்றும்

கருமமும் யோகந்தானுங்
கரணத்தைப் புனிதமாக்கிப்
பொருமிடர் வாயில் தோறும்
புக்குழல் கறங்கு போலத்

தெருமா துண் ணிறுத்தும்
தெளிந்த வக்கரணந்தன்னல்
நிருமலனுகு மீச னித்தனென்
றுணர்வுதிக்கும் ”

என்றும்

நித்திய நிமலனென்னும்
நினைவுறி னநித்தமாகி
பொய்த்தழி யுடம்புடம்பைப்
பற்றிய பொருள் வெறுத்து
மெய்த்தருள் குரவன்றன்னை
விரும்பினன் சென்றுசார்ந்து
தத்துவ முதறிநின்ற
தனியறி வினையே சாரும்

என்றும்

பிரபுலிங்கலீலையிற் கூறியது கொண்டும் மெய்ஞ் ஞான நிலையை யெய்தும் நெறி யுணரத்தக்கது.

இச்சை செல்லும் வழியல்லது அறிவுதொழில் கள் நிகழா. பிரபஞ்ச வைராக்கியம் முதிர்ந்து மெய்ப் பொருள் நாட்டம் மிக்காரது இச்சை, நிலை யில்லாதன வென்றும், துன்பந்தருவனவென்றும் வெறுத் தொதுக்கிய உடல் பொறி முதலியவற்றின் பாலும் ஏனைய பிரபஞ்சப் பொருட்கள் பாலும் செல்லாதாகலின், அவரறிவுக்கு விளங்குவது மெய்ப் பொருளேயாகும். இவ்வாறு சித்தத்தைச் சிவன் பாலே வைத்த பெரியார்க்குச் செகம் மறையச் சிவமே தோன்றி நிற்கும். பேரின்பப் பேரூற்றுன் சிவபரம் பொருளின் சேர்க்கை பெற்ற பெரியார்க் குள்ள அறிவிச்சை தொழில்கள் மேலும் மேலும் சிவத்தையே நோக்கி நிகழ்தலின் இவராற்றல் அறி வனுபவங்கள் மேன்மேலும் சிறப்பதேயன்றி, என்றும் புதிதாய்ப் பெருகும் பேரானந்த வாழ்க் கைக்கும் இவர் உரியராவர். உடல்பொறி கரண முதலியவற்றையும் ஏனைய பிரபஞ்சப் பொருளையும் நீக்கிச் சிவானுபவ மொன்றையே பொருளென மதித்து, பிரபஞ்சச் சார்வை யறவே கெடுத்துச் சிவபோக நிஷ்டாபரராய், நிற்போரே ஞானிகளாவார். தங்கள் பாலுள்ள பொறிகரணங்கள் உலகப் பொருள்கள் எவற்றின் கண்ணும் வியாபரிக்கு மாயின், இவர் அருவருத்து நிற்பர். இறைவனல் லாத பொருள் எல்லாவற்றை யும் அருவருத்து நிற்கும் நிலையில் இறைவனன்றி வேறொரு பொரு ளையுங் காணமாட்டார். சீவன் முத்தர் நிலையி லுள்ளாரெனக் கருதப்படும் ஞானிகள் சிவமொன்றே பொருளென வொழுகுபவராதலின் அவர் சிந்தை சொற் செயலெல்லாம் எம்மனோர் சிந்தை சொற் செயலொடு பெரிதும் வேற்றுமைப்பட்டு, நிகழும். நாம் விரும்புவனவற்றை வெறுத்தலும் நாம் வெறுப்பனவற்றை விரும்புதலும் நாம் அவர்பாற் காணத்தக்கனவே. ஐம் பொறிகளும் மனம் முதலிய அந்தக் கரணங்களும் ஆர்வம் அபிமானம், ஆசையுள்ள இடத்தே தொழில் செய்வன ஆதலின் பொறிபுலன்கள் இருந்தும், ஏனையோர் உலகத்தை யும் உலகப் பொருட்களையுமே காணும் போது, இறைவன்பாலன்றி வேறு ஒரு பொருட்கண்ணு மார்வ மபிமான மில்லாத இவர் இறைவனையே காணுவர். இதுவே ஞானிகளின் இயல்பு. ஆயினும் மாயாகாரியமான உடம்பு இருக்கும் வரையும் பிர பஞ்சச் சார்பு அவர்பாற் சிறிதுண்டு. அனுபவிக்கக் கிடந்த பிராரத்த வினை புசித்தொழியும் வரையும் உடம்பும் அவருக் குண்டு. ஆதலின் முக்குற்றங் கடிந்து மலநீக்கமும் சிவப்பேறு மடைந்தவரேயா யினும் பழையவாசனை காரணமாக உடம்பின் மூல மாயவரைப்பிரபஞ்சப் பொருள் நின்று சிறிது தாக்குதலுமுண்டு. அப்போதெல்லாம் தம்மை மிக வெறுத்துப் பதைப்புத் துடிப்புடன் இறைவனைச் சிறிது நேரமேனும் மறந்ததை நினைத்து அலறித் துன்புறுவர்.

தம்மிச்சை வாசனுமலத் தாக்கத்தால் உலகப் பொருட்கள் மேற் செல்ல, பொறிபுலன்கள் அவ் வழி சென்றுற் பெரும் பாதகஞ் செய்தோமென்று துன்புற்றுக் கலங்குவர். இவர் இவ்வாறு துன் புற்றுக் கலங்கி தாம் செய்ததற் கிரங்கித் தம்மை யிகழ்வது கொண்டு நாமிவரை நம்மனோர் போலச் சாமானிய ரெனக் கருதுதல் பொருத்தமாகாது. பிரவிருத்தி மார்க்கத்தில் நின்ற போது நிகழ்ந்த விழைவுகள் வெறுப்புக்களின் பழைய வாசனையால் ஒவ்வோர் சமயம் இவருடைய புலன்கள் பிரபஞ்சப் பொருட்கள் பாற் செல்லினிவர் தம்மேல் வெகுண்டு தம்மையிகழ்ந்தவமதித்தல் இவர் பெருமைக்குத் தகுந்த ஒழுக்க மேயாம்.

தினைத்துணையாங்குற்றம் வரினும்
பனைத்துணையாக் கொள்வர் பழிநாணுவார்

ஆதலின் இவர் தம்மையிகழ்வது கொண்டு இவர் பெரிதும் தம்மொழுக்கத்தில் இழுக்குற்றுரென்று கருதுதல் மடமையின் பாற்படும்.

நன்றறிவாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்

பெரிதும் குற்றம் செய்தாலுங் கீழ் மக்கள் கவலைப் படார். மேன் மக்களோ அவ்வாறன்றி மிகச் சிறிய தோர் குற்றஞ் செய்யினும் தாம் தம் நிலையிற் பெரிதுந் தாழ்ந்தோமென் றவலப்படுவர். ஆதலின் மேன்மக்கள் தம்மைத்தாம் இகழ்வது கொண்டு அவரை ஒழுக்கத்திற் சாமானியரெனச் சிறு மகாருங் கருதார். எங்குஞ் சிவத்தையே காணுந் தன்மையராகிய ஞானிகள் மாயா காரியமாகிய உடம்பு பொறி முதலியவற்றின் சார்பினாலும் பழைய வாசனையினாலும் மண் பொன் பெண்ணாதிய விவற்றின்பாற் கவரப்படுவாராகில் தம்மை வெறுத்திகழ்வதோ டமையாது தம்மை நிலையிற் ருழச் செய்த இப்பொருட்களைப் பழித்து நிற்கும் பாவனையில் உறைத்து நிற்பர்.


எல்லா மவனுகக் காண்ட லெழிற்பூசை
ஒல்கா வவனுதலுட்பூசை—நில்லா
உலகத்தை மாயா வுடலைத் தூடித்தல்
இலகுமரன் தோத்திரமா யெண்

(வள்ளலார் சாத்திரம்)

என்னும் ஆன்றோர் வாக்கும் சிந்திக்கத் தக்கது.

(தொடரும்)

உலக அகதிகள் சார்பில் பேசுவதற்காக இலங்கை வந்துள்ள இளவரசர் சத்ருதீன் கான் அவர்கள் இலங்கைப் பிரதமருடன் கலந்துரையாடுகிருர்.



## அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு ரூ. ச. |
|---|---|---|
| 1956 ம் ஆண்டின் 21 ம் இலக்க வெடிமருந்துச் சட்டம் .. | 0 45 | .. 0 10 |
| 1956 ம் ஆண்டின் 51 ம் இலக்க, முஸ்லீம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைச் சொத்துக்கள் அல்லது வக்புகள் சட்டம் .. | 0 85 | .. 0 20 |
| 1936 ம் ஆண்டின் 16 ம் இலக்கம், ஒத்துழைப்புச் சங்கங்களின் அமைப்பு முறையும் அதிகரிப்பையும் பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திரட்டித் திருத்துவதற்கான சட்டம் .. .. | 0 25 | .. 0 20 |
| 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்கச் சட்டம் ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டம் .. .. .. | 0 40 | .. 0 20 |
| கிராமச் சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 148)—மறுபதிப்பு .. | 1 30 | .. 0 25 |
| 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்கம், கிராம சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 10 | .. 0 10 |
| 1953 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம் .. | 0 35 | .. 0 15 |
| 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்கச் சட்டம் கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்கான சட்டம் .. .. | 0 45 | .. 0 20 |
| 1946 ம் ஆண்டின் 32 ம் இலக்கச் சட்டம்—நீர்ப்பாசனத்தைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித்திரட்டுவதற்கான சட்டம் .. | 1 10 | .. 0 20 |
| 1951 ம் ஆண்டின் 13 ம் இலக்க முஸ்லீம் விவாக, விவாகரத்துச் சட்டம் .. | 1 50 | .. 0 20 |
| 1954 ம் ஆண்டின் 31 ம் இலக்க முஸ்லீம் விவாக விவாகரத்து (திருத்த)ச் சட்டம் .. .. .. | 0 10 | .. 0 10 |
| அத்தியாயம் 104 தத்துவப் பத்திரங்கள் .. .. | 0 20 | .. 0 10 |
| அத்தியாயம் 120—வியாபாரப் பெயர்கள் .. .. | 0 40 | .. 0 10 |
| 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் .. | 1 35 | .. 0 20 |
| 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் .. | 0 15 | .. 0 10 |
| 1954 ம் ஆண்டின் 30 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் .. | 0 10 | .. 0 10 |
| 1954 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம்—தாங்கள் செய்துவரும் வேலைக் கிரமத்திற் சேதமடையும் வேலையாட்களுக்கு நஷ்ட பூர்த்திப் பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. | 0 35 | .. 0 20 |
| 1935 ம் ஆண்டில் ஏற்படுத்திய வேலையாட்கள் நஷ்ட பூர்த்தி விஷய ஒழுக்க விதிகள் .. .. .. | 0 35 | .. 0 20 |
| அத்தியாயம் 91—நொத்தாரிஸ்மார் (1938 ல் திருத்தியமைக்கப்பட்டது) .. | 1 30 | .. 0 35 |
| 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம்—இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்தலுக்காகவும் பராதீனப்படுத்துதலுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கான சட்டம் .. .. | 0 55 | .. 0 35 |
| 1946 ம் ஆண்டின் 3 ம் இலக்கச் சட்டம்—ஊர்ச்சங்கங்கள் .. | 2 90 | .. 0 35 |
| 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டம்—வேலையாட்கள் சம்பளச் சங்கச் சட்டம் .. .. .. | 0 50 | .. 0 20 |
| அத்தியாயம் 95, கலியாணப் பதிவுச் சட்டம் .. .. | 0 55 | .. 0 20 |
| 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க கலியாணப் பதிவுச் திருத்தச் சட்டம் | 0 50 | .. 0 10 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற் பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.